# ஏகலைவன்

இருதிங்கள் இதழ் - ஆடி - ஆவணி 2003
கணை - 5



சமூக - கலை - இலக்கிய - கல்வி - அறிவியல் ஏடு

ஊக்குவிப்பு 20/=

ஆடகம் சூடி அரிவையர் உலாவர
நாடகம் ஆடி நகைகளில் கனா எழ
வாடலேன் தோழி ! தேவதை விழா எனில்
சூடிநீ....... சொக்க.....தங்கமாய் நிலாக்களே !





# அருள்ஸ்
# ஆபரண மாளிகை

**வல்வெட்டி வீதி, உடுப்பிட்டி.**

**எங்கள் தரம் ~ நிரந்தரம்**

**எங்கள் வேதம் ~ உத்தரவாதம்**

**எங்கள் சேவை ~ உங்கள் தேவை**

சுத்தமான 22 கரட் தங்கத்தில் நவ

நாகரிக வகைகளில் உறுதியான

வேலைக்கு .........

**புன்னகையோடு வாருங்கள்**

**பொன்னகையோடு**

**சேருங்கள்**

# ஏகலைவன்

## கணை - 5

தூங்கிவிட்ட சந்ததிமுன்
பூபாளமாய் எழும் பேனா
துரோணர் தந்ததிந்த
ஆறாம் விரலாய் எழும் பேனா

கௌரவ ஆசிரியர்
திரு.ப.ஜோதீஸ்வரன்

பிரதம ஆசிரியர்
திரு.இ.சு.முரளீதரன்

மதியுரைஞர்
திரு.கி.நடராசா
திரு.க.தர்மலிங்கம்
திரு.மா.லோகசிங்கம்

ஓவியர்
திரு.எஸ்.நேசன்

விளம்பர முகாமையாளர்
செல்வன் ர.றொசான்
செல்வன் செ.ஜெயந்தன்

விற்பனை முகாமையாளர்
செல்வன் மு.பிரகாஷ்
செல்வி து.கம்ஷானந்தி

## உள்ளே ..............

**நேர்காணல்**
சு.வில்வரத்தினம் 13

**சிறுகதை**
கருணைரவி 04
தாட்சாயணி 24

**கவிதைகள்**
சண்முகம் சிவலிங்கம் 03
த.ஜெயசீலன் 22
இ.சு.முரளீதரன் 33
நரகத்துமுள் 40
ச.முகுந்தன் 36

**திரைப்பட விமர்சனம்**
இராகவன் 37

**சிறப்பு விருந்தினர் சிம்மாசனம்**

**மாணவர் ஆக்கங்கள்**

# ஏகலைவன்

**சமூக - கலை - இலக்கிய - கல்வி அறிவியல் ஏடு**

" விளைச்சலை மதித்து விலைகொடு
கலைஞனின் சிலைக்கும் குடை கொடு "

***அன்பான இதயங்களே !***

சாதி, மத, இன, வர்க்க பேதமற்ற ஒரேயொரு சமூகக் கட்டமைப்பான மாணவர்களை நம்பி, நாங்கள் ஆரம்பித்த பயணம் நன்றாகவே தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஈழத்து இலக்கிய வரலாற்றிலே கனதியான மாற்றங்களை உருவாக்க முடியாவிட்டாலும் மாணவர்களிடத்தே இலக்கிய விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்துவதில் 'ஏகலைவன்' முன்னிற்கும். எங்கள் பலமும் பலவீனமும் மாணவர்கள் தாம்.

இச்சஞ்சிகைக்கான முதலீடும், தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் பொருளாதார நட்டமும் பெருஞ்சுமையாக இருந்தாலும், ஆங்காங்கே சில நல்ல இதயங்களின் பாராட்டுதல்கள் மழைக்காலச் சாரலாய் மனதுக்கு இதமளிக்கின்றன.

களம் இல்லையெனக் கவலைப்படும் எழுத்தாளர்களும், ஆக்கங்களைப் பெற முடியாமல் அல்லற்படும் இதழியலாளர்களும், இங்கு இருக்கின்றார்கள். தாமும் தம்மைச் சார்ந்தவர்களும் செய்வதே இலக்கியம் என்று மார்தட்டும் மனப்பாங்கை ஆக்கக் கர்த்தாக்கள் தூக்கி எறிந்துவிட்டு உன்னத இலக்கியம் பற்றிச் சிந்திக்க வேண்டும். தமிழ் இலக்கியம் உலக தரம் நோக்கி முன்னேற வேண்டும்.

***ஒன்றுபடு தமிழினமே !***
***ஒற்றைச் செருப்பு ஊர்வலம் போவதில்லை .***

**- ஆசிரியர் -**

# மூடலிலிருந்து......

சண்முகம் சிவலிங்கம்

இந்த ஆய்வரங்கின்
மாரிகால தவளை சங்கீதத்திலிருந்தும்
இருள் மூடிய வெளியின்
உள்ளில்
சுடரும் சிறு குமிழை
பனி மூட்டமாக
முகட்டு இருளும்
மூலைகளின் கலங்கல்களும்
மூடிவிடக் காத்திருக்கும்
என் நீண்ட கோபுர
அறையிலிருந்தும்,
மடங்கி நிமிரும் என் தெருவழியே
ஓடி வருகிறேன். என் வெளிக்கு -
பட்டி பூக்கள்
பூத்த என் மணல் வெளிக்கு,
இறுக்கத்தை விட்டு
குபீர் எனப் பாயும் காற்றாய்,
உங்கள்
பொன் முகங்களையும்
பூச்சரம் கோர்த்த புன்னகைகளையும்
காண,
ஓ !
என் வயற்பாட்ட குருவிகளே.

01.06.2003 அதிகாலை

# முரண்கள்

துருவை ரவி



அவன் என்னையே பார்த்தான். நானும் பார்த்தேன். அவனாகத் தானிருக்க வேணும். பொக்கற்றுக்குள் கைகளை வைத்தபடி பார்வையை வேறுபக்கம் திருப்பினான்.

"கோபன் ....."

கூப்பிட்டேன். அவன் மறுபடியும் பார்த்தான்.

"என்னைத் தெரியலையே...."

அவன் பேசாமல் நின்றான்.

"நான் தான் உன்னோட படிச்ச சரன்."

கோபன் கண்களை அகட்டியபடியே நின்றான். பார்வைகளில் அதிசயிப்பு வளையங்களிட்டன.

கோபனின் அந்தப் பார்வையில், என்னால் எந்த உணர்வுகளையும் புரிந்து கொள்ள முடியவில்லை. இது எனது பலவீனங்களா ? என் பலவீனங்களை பலபேர் பரீட்சித்துப் பார்ப்பதுண்டு.

கோபனும் பரீட்சித்துப் பார்க்கின்றானா....?

முன்பு என்றால் கோபன் என்னைக் கண்டவுடன் கிட்ட ஓடி வருவான். என்ரை கைகளைப் பிடித்து தன்ரை கைகளுடன் வைத்திருப்பான். இப்ப எனக்கும் கோபனுக்குமிடையில் நிறைய இடைவெளிகள் ஏற்பட்டுவிட்டன.

எனது வெய்யில் உவிந்த ஜீன்சும் பொத்தல்கள் விழுந்த சேட்டும் புழுதிகள் குடித்த கால்களும் தான் இந்த இடைவெளிகளை அதிகமாக்கியிருக்கவேணும்.

ச்சாய்..........

கோபன் என்னோடு அப்படி நடக்கமாட்டான்.

கோபன் நல்லா வளர்ந்து விட்டான். மீசையும் வழித்திருக்கின் றான். கண்ணாடியும் போட்டிருக்கிறான். கொலோனும் மணக்குது. "சூ"வும் மினுங்குது. பார்த்தால் வெளிநாட்டால் வந்தவன் மாதிரி இருக் கிறான். தெத்தல்ப் பல்லுகளில் கிடக்கிற மஞ்சள் காவிகள் தான் இன் னும் மறையவில்லை.

கோபன் இன்னும் என்னுடன் கதைக்கவில்லை. கோபனின் பார்வைகளும் என்னிலிருந்து முறியவில்லை.

"கோபன்"
"ம்"
"ஏன் பேசாமல் நிக்கிறாய்"
"........"
"இவளவு காலமும் எங்கை இருந்தனி?"
"அங்கிளோட கலம்பில இருந்தனான். பெரியம்மாவைக் கூட் டிக் கொண்டு போகத்தான் வன்னிக்கு வந்தனான்"

கூடாரமடித்த வாகனமொன்று கோபனின் மிகுதிச்சொற்களை நொருக்கி விட்டுச் செல்கிறது.

கிரவல் றோட்டுப்புழுதி "எல்வ்" வின் புகையோடு சேர்ந்து சுருள் சுருள்களாக எழுந்து அவதிப்பட்டு மடிகிறது. கோபனால் மூச் செடுக்க முடியவில்லை. திணறிப்போனான். நான் மூக்கை கைகளால் பொத்தினேன்.

கோபனுக்கு புழுதி நுவரெலியாப் பனிமூட்டத்தை விட கொடிய தாய் இருந்தது. "எல்வ்" வின் மேல் அவனுக்குளிச்சலாய் இருந்தது. சினத்தோடு "எல்வ்" வைப் பார்த்தான். "எல்வ்" பள்ளமொன்றில் விழுந்து உன்னி நின்றது. உடைந்து தூங்கிய "எல்வ்"வின் பின் கதவொன்று உன்னலுக்கு சடக்... சடக்... என்ற சப்தத்தை கிளப்பியது.

புழுதி உட்செல்லவிடாமல் கட்டப்பட்ட சாக்குகளை விலத் திப்போட்டு ஐந்தாறு பயணிகள் கழுத்துக்களை நீட்டிக்கொண்டு இருந்தார்கள். அச்சுவேலி முடக்கன் சந்தி "ஹிரேஷர்" தொழி

லாளர்களின் தலைகள் மாதிரி அவர்களின் தலைகளில் புழுதி கள் படிந்திருந்தன.

தெஹிவளை மிருகக் காட்சிச்சாலைக்கு "எல்வ்" வாகனங் களில் தான் மிருகங்களைக் கொண்டு செல்வார்கள். அது என்ன பியூட்டி...அதுகளும் இப்படித்தானே தலைகளை நீட்டுகிறதுகள்.

கோபனால் இந்த வாழ்க்கையை ஜீரணிக்கமுடியவில்லை.

"சரன்..."

"ம்..."

"என்னெண்டு இஞ்சை வாழுறாய் ?"

நான் கோபனைப் பார்த்துச் சிரித்தேன். இந்தச் சிரிப்பை கோபன் ஒரு சலிப்பின் சிரிப்பாக நினைக்கக்கூடும். கோபங்கள், கொதிப்புக்கள், கீறல்கள், கிழிவுகள், தீச்சுவாலைகள் இருக்கும் எந்த முகங்களையும் சிரிப்பால் அடக்கலாம்.

"சிரிப்பு என்பது ஒரு ஈர்ப்பு"

சொக்கண்ணா எனக்கிதை அடிக்கடி சொல்லுவார். எனக்கு கோபனை நினைக்க அந்தச் சொக்கண்ணாவின் ஞாபகம்தான் வரு கிறது...

அப்ப நாங்கள் யாழ்ப்பாணத்தில்.........

எனக்கும் கோபனுக்கும் பத்து வயது. நாங்கள் ரண்டுபேரும் ஒன்றாகத்தான் படிச்சனாங்கள்.

நான் பள்ளிக்கூடம் போக கோபன் 'நல்லையா' மாஸ்டர் வீட்டு பனங்காணியிக்கை நிப்பான். பட்ட பனைப் பொந்துகளுக்குள் கிளி பிடிச்சுக் கொண்டு வருவான். தென்னங்கிளிக்கு கழுத்தில் வரி இருக்கு மாம். ஒரு கிளி பத்து ரூபாவுக்கு விற்பான். மயிர்கள் முளைக்காத குஞ்சு களுக்கு ஐந்து ரூபா வாங்குவான்.

மேலில் சேட்போடமாட்டான். காற்சட்டை மட்டும் கட்டியிருப் பான். பொத்தான்கள் இல்லாமல் காற்சட்டை அவிழ்ந்து

அவிழ்ந்து விழும். பொத்தல்கள் விழுந்த பின்பக்கத்தில்
கடதாசிகளை மடித்து 'தபால்' என்று போடுவேன்.
கோபன் அடிக்க என்னைத் துரத்துவான்.

ஆட்டுக் குட்டிகளுக்கு வால்களில் காவோலைகளைக் கட்டி விடுவான். ஆட்டுக்குட்டிகள் கெடுதிப்பட்டு ஓட தானும் துரத்திக் கொண்டு ஓடுவான்.

ஒருநாள் ஆட்டுக்குட்டியை துரத்திக்கொண்டு ஓடத்தான் சொக் கண்ணா கோபனைக் கண்டவர். கோபனைக் கண்டதும் சொக்க ண்ணா சிரித்தார். சொக்கண்ணா சிரித்தார் என்றால் அவர்கள் சொக் கண்ணாவுக்குப் பிடித்தவர்களாக இருக்கும். அவற்றை சிரிப்பிலை கோபன்ரை மனம் ஒட்டியிருக்க வேணும். கோபன் அப்படியே நின்றான்.

ஆட்டுக்குட்டி ஓடிக்கொண்டு இருந்தது....
'தம்பிக்கு என்ன பேர்'
'கோபன்'
'எத்தனையாம் வகுப்புப் படிக்கிறியள் ?'
'அய்ந்து'
'இண்டைக்குப் பள்ளிக்கூடம் போகேலையோ...'
'இல்லை'
'ஏன்...?'
'..........................'

சொக்கண்ணாவுக்கு கோபனின் நிலை விளங்கிவிட்டது. கல்வி, எதிர்காலம் பற்றி கோபன் சிந்திக்கும் வயதா இது ? சொக்கண்ணா கோபங்களை பெற்றோர் மேல் எறிந்தார்.

'கோபன், இனி நீ பள்ளிக்கூடம் போகாமல் நிக்கக்கூடாது. படிச்சு நல்ல உத்தியோகம் பாக்கோணும். என்ன?

சொக்கண்ணா கோபனின் கன்னங்களை கைகளால் அள்ளி விட்டுச் சென்றார்.

அடுத்த நாள்......

சொக்கண்ணா சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். மேலில்

சேட் போடவில்லை. மேல் எல்லாம் சேறாய் இருந்தது.

போக்கடிக்குளம் கனகாலமாக தோண்டாமல் இருந்தது. போன வருசக் கோடைக்கு குளத்தில் தண்ணியில்லை. மாடுகளும் தண்ணிக்கு அலைஞ்சதுகள். சொக்கண்ணா ஒவருநாளும் பின்னேரத்தில் குளத்தைப் போய் தோண்டுவார். இப்பவும் தோண்டிப் போட்டுத் தான் வாறார்.

' சொக்கண்ணா'
' என்னடா ?'
' நானும் வாறன் சைக்கிளிலை.'

சைக்கிளை சொக்கண்ணா நிறுத்தினார். நான் ஏறியதும் சைக்கிளை எடுத்தார்.

சொக்கண்ணா வழமையைவிட சைக்கிளை வேகமாக ஓடினார். அவர் குளித்துவிட்டு ஆலடிவாசிகசாலைக்குப் போகவேணும்.

இண்டைக்கு வாசிகசாலைக் கூட்டம். புதிய நிர்வாகத் தெரிவு. கனநாளாகப் பேப்பர்வராமல் வாசிகசாலை பூட்டியிருந்தது. சொக்கண்ணா நிர்வாகத்தில் இணைந்து வாசிகசாலையை நல்லபடியாக இயக்கப்போகிறார்.

சொக்கண்ணா சைக்கிளை நிறுத்தினார். நிறுத்தேக்கை கேட்டார்

'நீ இண்டைக்குப் பள்ளிக்கூடம்போனனியோ ?'
'போனனான்'
"கோபன் வந்தவனே...?"
"வரேலை"
"ஏன்வரேலை"
"வீட்டிலை சரியான கஷ்டம் "
"தேப்பன் என்ன வேலை செய்யிறார்?"
"தேப்பனில்லை. பொம்மர் அடித்துச் செத்துப்போனார்."
அப்பதான் அவருக்குத் தெரிந்தது கோபன் கங்காணி யாற்றை பேரன் என்று. கங்காணியாரை நினைக்க

அந்த வைரவர் கோயில் பொங்கல் தான் சொக்கண்ணாவுக்கு ஞாபகத்தில் வந்தது.

வைரவர் பொங்கல் என்றால் கங்காணியாரை கோயிலில் காண லாம். வெள்ளை வேஸ்டியை முழங்கால்கள் வரையும் மடிச்சுக் கட்டி யிருப்பார். நெற்றியில் மூன்று கோடு விபூதி அப்பியபடி இருக்கும். சங்கிலி யில் புலிப்பல்லுப் பென்ரன் பொக்குள் முகப்பை உரஞ்சியபடியிருக்கும்.

வருடாவருடப் பொங்கலுக்கு கங்காணியார்தான் வைரவற்றை வாசலில் வளந்து வைக்கிறவர். வளந்தும் பானை பொங்கிச்சரிச்ச பிறகுதான் மற்றவர்கள் பொங்கத் தொடங்குவார்கள்.

பூசாரியாருக்கு கலைவந்தாலும் கங்காணிமாருக்குத்தான் வேப்பங்குழைகளால் தலையிலடிப்பார்.

அப்ப கூப்பன் காலம். அரிசிக்குச் சனங்கள் கூப்பன்களை அடுக்கி வைத்துவிட்டு கியூவில் நிற்பார்கள். கங்காணிமார்களைக் கண்டால் மனேச்சர் கங்காணிமாருக்குத்தான் முன்னுக்குச் சாமான் களைக் குடுப்பார். ஆஸ்பத்திரி எண்டால் என்ன தியேட்டர் எண்டால் என்ன கள்ளுக் குதமெண்டால் என்ன கங்காணிமாருக்குத்தான் முதல் இடம்.

சொக்கண்ணாவுக்குச் சரியான கோபம். கங்காணிமாரும் எங் களை மாதிரித்தானே சாதாரண மனிதர். எங்களை விட அவர்களை யேன் உயர்த்திப் பார்க்கிறார்கள். வேலைத்தளங்களுக்கு மட்டும்தான் கங்காணிமார். நாங்கள் சமூகத்திலும் அப்படி ஒரு அந்தஸ்தை அவர் களுக்குக் கொடுப்பதனால் தானே சமூகத்தில் உயர்வு தாழ்வுகள் கிளைகள் விடுகின்றன. சொக்கண்ணா நிகழ்வுகளை நினைத்து தனக் குள்ளே குமைந்தார்.

அன்றும் வைரவப் பொங்கல். வைரவரில் இரவுதான் பொங்கல் நடக்கிறது. சரியாக மாலை ஆறுமணிக்கே வளந்துப் பானை ஏறிவிடும். வழமையாக வளந்து வைக்கும் கங்காணியார் எட்டுமணியாகியும் கோயி லுக்கு வரவில்லை. சனங்கள் பார்த்துச் பார்த்துச் சினந்தனர். இப்படி எந்தநாளும் கங்காணியாரை சனங்கள் சினந்ததில்லை. சனங் களில் எழுகிற எரிச்சல்களை நினைக்க சொக்கண்ணாவுக்கு

கோபம் உச்சிக்கு ஏறியது.

"வேறையாராவது வளந்தை வையுங்கோ. கங்காணியார் தனக்கு ஏற்ற நேரம் வந்து வளந்தை வைப்பர். அது மட்டும் நாங்கள் காவல் இருக்கோணுமே?"

" அதுதானே ...கோயில் அவருக்கெண்டு எழுதியாச்சே ? வேறை ஆரும் வளந்து வைச்சால் வைரவக் கிழவன் என்ன கோவிக்கப் போறாரே ?"

காங்கேசுக் கிழவனும் சொக்கண்ணாவுக்காகப் பேசினார்.

"கங்காணியார் மம்மல் பொழுதுக்கையே மூரியளும், பானையள் பன்னாடையள் எண்டு அடுக்கிப் போட்டு போட்டார். வேறை ஆரும் வளந்து வைச்சால் அந்த மனிசன் என்ன நினைக்கும்?"

வள்ளிக்கிழவி எதிர்ப்புக்குரல் காட்டினாள். கடைசியாக கங் காணியார் வந்து பார்க்க காங்கேசுக்கிழவன் வளந்தை வைச்சுக் கொண்டிருந்தார். சொக்கண்ணா நெருப்பை மூட்டிக் கொண்டிருந்தார். கங்காணியார் அன்று பெரிய சண்டையே போட்டார். இதுக்கெல்லாம் சொக்கண்ணா தான் காரணமென்று கூடுதலான சனங்கள் பேசிச்சிது. சொக்கண்ணா எதையும் காதில் விழுத்தவில்லை. இனியும் பிரச் சனைகள் வரக்கூடாதென்று அடுத்த பொங்கலுக்கு சொக்கண்ணா ஒரு நிர்வாகத்தை தெரிந்தார்.

சொக்கண்ணா மூட்டிய நெருப்பாலை இப்ப கோயிலில் ஆரும் வளந்து வைக்கலாம்.

சொக்கண்ணாவின் நெஞ்சில் "பொம்மர் அடிச்சு.... "அந்த வார்த்தைகள் முட்களாய் குத்தியது. சைக்கிளை எடுத்தார்.

- 2 -

ஒரு காலை நேரம் ...சொக்கண்ணா கோபன் வீட்டுப்படலை யில் சைக்கிளை நிறுத்தினார். சொக்கண்ணாவைக் கண்டதும் கோபன் சிரித்தபடி ஓடிவந்தான்.

"காலை வணக்கம் கோபன்." சொக்கண்ணா சிரித்தார்.

"குட்மோனிங் எண்டு சொல்லுங்கோ சொக்கண்ணா"

சொக்கண்ணா சிரிக்கவில்லை.

"வீட்ல ஆர் நிக்றது ?"
சொக்கண்ணா சாதாரணமாய் கேட்டார்.
"அம்மா பனம்பழம்பொறுக்கப் போட்டா."
சொக்கண்ணா சைக்கிளிலிருந்த ஒரு பாசலை எடுத்துக் கொடுத்தார்.

"என்னண்ணை இது...?'
"கொப்பியளும் பேனையளுமிருக்கு.
ஒழுங்காப் பள்ளிக்கூடம் போகோணும்."
"................"
"ஏன் பேசாமல் நிக்றாய் ?"
"பள்ளிக்கூடம் போகமாட்டன்"
"ஏன்?"
"சேட்டில்லை."

கொஞ்சநேரம் சொக்கண்ணா பேசாமல் நின்றார். 'பொம்மர்' கண்களுக்குள் வந்துகொண்டிருந்தது. அதன் பேரிரைச்சல்களில் நிலம் அதிர்ந்து கொண்டிருப்பதாய் உணர முடிந்தது. அந்த அதிர்வு நினைவுகள் சுழன்றடிக்க சொக்கண்ணா சைக்கிளை எடுத்தார்.

சொக்கண்ணா எடுத்துக் கொடுத்த புதுக்காற்சட்டை, புதுச் சேட், புதுக்கொப்பிகள், புதுப்பேனைகளோடு கோபன் ஒவருநாளும் பள்ளிக்கூடம் போகிறதைப் பார்த்து சொக்கண்ணா சந்தோசப்பட்டார்.

ஒருநாள் காலை....

மண்ணெண்ணெய் பரல்கள் வானத்திலிருந்து கொட்டப்படுவது மாதிரி சத்தங்கள் பெருத்துக்கொண்டு வந்தன. கோடி சில்வண்டுகள் எழுப்பும் சத்தங்களைவிடகூடுதலான கொடிய சத்தங்கள் வானத்தை தின்று கொண்டிருந்தது. ஊர் உழப்படுவதாய் எல்லாச் சனங்களும் ஊரைவிட்டு ஓடினார்கள். நாங்களும் ஓடிப்போய் ஒரு திட்டிக்குமேல் நின்று ஊரைப் பார்த்தோம். ஊர் எரிந்து கொண்டிருந்தது. அந்த நெருப் புக்கைகள் நீண்டு நீண்டு வந்தன. அந்த நீண்டுவரும் நெருப்புக் கை களிலிருந்து சத்தங்கள் பெருகிக் கொண்டு வந்தன. அந்தச்சத்தம் எங் களை விரட்டியது.

- 3 -

" சரன்"

" ம்....."

"நீ படிக்கிறியே..?"

"இல்லை."

"ஏன்?"

"கிபிர் அடிச்சு அப்பா செத்துப்போனார்."

கோபன் மௌனமாய் நின்றான். அந்த மௌனத்தில் எனது பழுத்தஜீன்சும் பொத்தல்விழுந்த சேட்டும் எனது வறுமையை உணர்த்தி யிருக்கும். ஆனால் கோபன் தனது பத்து வயது வாழ்வை நினைத்துப் பார்ப்பானா?

நிலவுகின்ற இந்த மௌனம் உடைவதாயில்லை. கோபன் இந்த மௌனத்தை நொருக்கி இருவருக்குமான இடைவெளிகளைத் தூர்த்து "சரன்.." என்று என்னைக் கட்டிப்பிடிக்க நான் போடும் அவகாசம் போதாதா?

தூரத்தில் "எல்வ்" வாகனம் ஒன்று வந்து கொண்டிருந்தது. "ரொக்கற்" கக்கும் புகைகளால் வானம் மறைவது மாதிரி புழுதிகள் "எல்வ்"வின் பின்னால் எழுந்தது. பின்னால் தெரிந்த மரங்கள், மனிதர் கள் எல்லாவற்றையும் புழுதிகள் தின்று கொண்டிருந்தன.

கோபன் லேஞ்சியை எடுத்து முகத்தைப் பொத்தினான்.

"கோபன் ...நான் சொக்கண்ணாவைத் தேடிப்போறேன். சொக் கண்ணா வந்தாரெண்டால் இந்த றோட்டிலை இப்படிக் கிடங்குகள் இரு க்காது. ஒவருநாளும் மண்போட்டுக் கொண்டிருப்பார். புழுதிகளுக்குத் தண்ணி தெளிச்சுக் கொண்டிருப்பார். குளங்கள் தூர்ந்து போகாது. மாடுகள் ஆஸ்பத்திரியளுக்கை போகாது. வாறியா கோபன் சொக்கண் ணாவைப் பார்க்க"

"சொக்கண்ணா எங்கே இருக்கிறார் ?"

"சொக்கண்ணாவை இப்ப ஒருதரும் கவனிக்கிறேலையாம். சொக்கண்ணா ஒரு கோயிலிலை இருக்கிறாராம். ஒவருநாளும் மணி யடிக்கிறவராம். வாவன் சொக்கண்ணாவிடம் போவம்..."

"பஸ் வருகுது இனி விட்டாக் கஸ்டம் "

கோபன் சாதாரணமாய்ச் சொல்லிவிட்டு 'பாய்க்'கைத் தூக்கினான். கோபன் பஸ்லில் ஏறும்வரை நான் நிற்கவில்லை. அவனையும் திரும்பிப் பார்க்கவுமில்லை. சொக்கண்ணாவிடம் போனேன்....


# நேர்காணல்



## சு.வில்வரத்தினம்

சு. வில்வரத்தினம் ஈழத்துத் தமிழ்க்கவிதை துறையில் குறிப்பிடத் தக்க கவிஞர். புங்குடுதீவினைச் சேர்ந்த இவர் போர்ச் சூழலினால் இடம் பெயர்ந்து கிழக்கிலங்கையில் வசித்து வருகின்றார். கவிஞராக மட்டுமல்லாது பழகுவதற்கு நல்ல மனிதராகவும் காணப்படுகின்றார். மு. தளையசிங்கம், மு. பொன்னம்பலம் போன்றோரின் வழி வந்தவராகத் தம்மை இனங்காட்டிக் கொள்கின்றார். 1970 இல் இவரது முதற்கவிதை மல்லிகையில் வெளிவந்தது. இன்றுவரையும் தமிழ்க் கவிதையினை செழிக்க வைத்துக் கொண்டிருக்கின்றார். அகங்களும் முகங்களும் (1985), காலத்துயர் (1995), காற்றுவழிக் கிராமம் (1995), நெற்றி மண் (2000) போன்ற கவிதைத் தொகுப்புக்கள், நம்நாட்டிலே பதிப்பிக்கப்பட்டு வெளிவந்திருக்கின்றன. இத்தொகுப்புகள் அனைத்தினையும் இணைத்து பின்னர் எழுதப்பட்ட கவிதைகளையும் சேர்த்து "உயிர்த்தெழும் காலத்திற்காக" (2001) எனும் தொகுப்பு தமிழ் நாட்டிலிருந்து விடியல் பதிப்பக வெளியீடாக வந்துள்ளது.

நேர்கண்டவர் :
**இ.சு.முரளிதரன்**





**நீங்கள் நீண்ட காலமாகவே கவிதைத் துறையில் ஈடுபட்டு வருகிறீர்கள். அந்த வகையில் எண்பதுகளுக்கு முற்பட்ட கவிதைகளினதும் பிற்பட்ட கவிதைகளினதும் போக்குகளைப் பற்றிக் கூறுங்கள்?**

இந்தக் கால இடைவெளிகளை முன்பின்னாக மாற்றலாமோ என்று எனக்குப் படுகின்றது. எண்பதுகளுக்குப் பின்னர் என்று குறிப்பிடப்படுகின்றனவற்றின் பண்புகள் எழுபதுகளின் பிற்பகுதியிலேயே ஆரம்பமாகி விட்டன. எப்பொழுது இங்கே தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை என்பது ஆரம்பிக்கப்பட்டதோ அப்பண்புகள் அனைத்துப் படைப்புகளிலும் தலைகாட்ட வெளிப்பட்டுவிட்டன. அத்தகையன மொழி உணர்ச்சிக் கவிதைகள் என்று சொல்லப்பட்டாலும் கூட அவற்றுக்கும் ஒரு வரலாற்று முக்கியத்துவம் இருக்கவே செய்கின்றது. மூத்த கவிஞர்களான மஹாகவி, முருகையன், காசிஆனந்தன், நீலாவணன், மு.பொ. பாண்டியூரான் போன்றோரிடம் மொழி சார்ந்த உணர்ச்சிக் கூற்றுக் கவிதைகள் வெளிப்பட்டன என்று சொல்லலாம்.

தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகப் போராட்டம் நடந்த காலத்தில், பழைய வீரயுக உணர்வுகளைக் கிளறுகின்றதான கவிதைகள் வந்திருந்தாலும் கூட போராட்டச் சூழலுக்கு இசைவானதாக அவை இருக்கவில்லை. மக்கள் மீதான ஒடுக்குமுறை அதிகரிக்கத் தொடங்கியபோது அம்மக்களுடைய உணர்வுகளையும் சேர்த்தே பிரதிபலிக்கின்றதான தேசியப்பண்பு கொண்ட கவிதைகள் எழுபதுகளின் முற்கூறிலே தொடங்கி இன்றுவரைக்கும் நீடித்து வரவே செய்கின்றன. ஆரம்பத்தில் மொழி உணர்ச்சி இருந்தபோது மொழி மீதான பெருமைகள் பேசுதல், வீரயுகக் கனவுகளைக் கொண்டு வருதல் என்பதாக அது இருந்தது.

பின்னர் யதார்த்தச் சூழலையும் தேசியப் பண்பையும் இணைத்ததாக எண்பதுகள் வரைக்கும் ஆட்சி செலுத்தின. இந்தத் தேசிய குணாம்சம் தொண்ணூறுகளுக்குப் பின்னால் முஸ்லிம் மக்களுக்கும் தமிழ்மக்களுக்கும் ஏற்படுத்தப்பட்ட பிளவுகளின் போதும் கிழக்கிலங்கை முஸ்லீம்களின் பிரச்சினைகளுக்கும் அதே வகையான சூழலுக்கும் முகம் கொடுப்பதான தோரணையுடன் அமைந்திருந்தது. இவை அவரவர்களின் தேசியப் பண்புகளைக் கொண்டு வருவதாகவே இருந்தன.

எண்பதுகளில் பல்வேறு இயக்கங்களின் சூழலில் மக்களிடத்தில் பிரசுரங்களாகவும், வெளியீடுகளாகவும் கவிதைகள் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டன. சுவரொட்டிகள் மூலமாகவும், கவிதைகள் உருவாக்கம் பெற்றன. காசியானந்தன் தன் தொகுதியொன்றை "தெருப்புலவர் சுவர்க் கவிதைகள்" என்று வெளிக் கொணர்ந்தார். இதுபோல நிஜமான சுவரொட்டிகள் இலக்கியத்தன்மையோடு எழுதப்பட்டன.

எண்பதுகளில் இருந்தளவுக்கு வாசிப்புச் சூழல் தொண்ணூறுகளில் வலுப்படவில்லை. ஆனால் நாடகங்களூடாகவும் பாடல்களூடாகவும் கவிதைகளைச் சொல்லும் தன்மைவந்தது. தொண்ணூறுகளுக்குப் பின்னால் விடுதலைப் புலிகளினுடைய பண்பாட்டு நிறுவனங்களூடாக பல கவிஞர்கள் உருவானார்கள்.

தொண்ணூறுகளின் பின்னர் நிலாந்தனின் 'மண்பட்டினங்கள்' போன்ற முயற்சிகளிலெல்லாம் கவிதை என்பது கவிதையாக மட்டுமன்றி, கவிதை - உரைநடை - வரலாறு விமர்சனம் எனும் வகையில் பல்வேறு மாற்றம் பெற்று ஆனாலும் கவிதைத் தன்மையோடு இழையோடுகின்றன.

நாடகம், நாவல், சிறுகதை என்பனவற்றினுள்ளும் கவிதை ஊடுருவிக் கலந்திருக்கின்றது. நிலாந்தன், அகிலன், ஜெயசங்கர் போன்றவர்கள் நாடகம் கவிதை என இருதுறை ஈடுபாடு கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். மஹாகவி, முருகையன் கூட நாடகம் எழுதுபவர்களாக இருந்திருக்கின்றார்கள். மு.பொ.விலிருந்து ஓட்டாமாவடி அரபாத் வரை சிறுகதை எழுதுபவர்களாக இருந்திருக்கின்றார்கள். என்னுடைய முயற்சியும் சிறுகதையின் பாணியைத் தழுவிப் படைக்கப்பட்டுள்ளது.

ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் அண்மைக் காலங்களில் ஏதேனும் ஆரோக்கியமான மாற்றங்கள் தென்படுவதாக நீங்கள் கருதுகின்றீர்களா ?

இதுபற்றி ஆழமாக விவாதிக்க வேண்டும். இது ஒரு பேட்டியிலே சொல்லக்கூடிய விடயமல்ல. கவிதைத்துறையில் பெருமளவிற்கு வரட்சி காணப்படுவதாகவே கருதுகின்றேன். எண்பதுகளில் தொண்ணூறுகளில் வெளிவந்தளவிற்கு அண்மைக்காலத்தில் வெளிவந்து இருக்கின்றதா என்பது ஆய்விற்குரியது. தேசியப் போராட்டம் நிகழும் சூழலில் உணர்ச்சி முன்னிடம் வகிப்பதனால் கவிதைக்கொரு முக்

கிய இடமுண்டு. கவிதை என்பது வாசகனுக்குரிய இடத்தை வழங்காததாக சிலவேளை அதிலிருந்து தொட்டு தன்னால் விரிக்கக்கூடியதாக அவனுக்குள் அதிர்வை எழுப்பி மீளவும் பேசவைக்கின்ற தன்மையை இல்லாமல் செய்து விடுவதாகக் காணப்படுகின்றது. உணர்ச்சிக் குவியலாக மாறி அதற்குரிய மௌனத்தை வழங்காது முற்று முழுதாகக் கொட்டித் தீர்ப்பதாக இருக்கின்றது. கவிதையின் மௌன வெளிப்பாடு வாசகனுக்குள்ளும் அதிர்வுகளை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும். இப் பண்பு கொண்ட கவிஞர்கள் பலர் இருந்திருக்கிறார்கள்.

இன்றைய காலகட்டத்தில் இவை எல்லாம் பரீட்சித்து பார்க்கப்படுகின்றனவா என்பதெல்லாம் பிரச்சினைக்குரியது. புதிய கவிஞர்களது புதுக்கவிதைகள் அநேகமாக ஒரே மாதிரியானவையாக அமைந்திருக்கின்றன. இதற்குரிய வாய்ப்பை அவர்கள் கையாளுகின்ற முறை மற்றவர் கையாளுகின்ற முறை போலவே இருந்து ஒருவரை ஒருவர் அறியாமலேயே அவர்கள் சார்ந்த ஓட்டத்தின் பிரதிபலிப்பாக ஒரே பாணியில் அமைந்து விடுகின்றன. இதனால் ஒரு தேக்கம் ஏற்படலாம். தொண்ணூறுகளில் ஏற்பட்ட கிழக்கிலங்கை முஸ்லீம் கவிஞர்களுடைய உணர்ச்சி மட்டுப்படுத்தப்பட்டோ அளவு மீறியோ பாவிக்கப்பட்டிருந்தாலும், அதை எல்லாம் பின்னால் "சோலைக்கிளி" போன்றவர்கள் கையாள ஒரே பாணி முறையினைப் பின்பற்றிக் கொண்டு பிற கவிஞர்களும் தொடர்ந்தார்கள். அதிலிருந்து தம்மை வெட்டித் துணித்து தங்களின் தனித்தன்மையை நிலை நாட்டுவதற்குள் அவர்களினுடைய கவிதை எழுச்சி என்பது வரட்சிக்குரியதாகிவிட்டது.

புதிய கவிஞர்கள் பல்துறைப் பரிச்சியங்களையும் வேற்றுமொழிக் கவிதைகளினூடான பரிச்சயங்களையும் சமகாலத்தில் உலகப் பரப்புக்குள் வெளி வருகின்ற பல்வேறுபட்டவற்றையும் உள்வாங்கும் பண்புடையவர்களாக இருந்தால் அவை மாற்றங்களுக்குரியனவாக மாறும்.

**கவிதை தேக்கமடைந்து இறுதிக் காலத்தை எட்டிவிட்டது என்பது பற்றி ..... ?**

கவிதைக்குரிய காலம் முற்றுமுழுதாக முடிந்துவிட்டது என்று சொல்வது கவிதை என்பதை ஒரு தனித் துறையாகக் கண்டு மயங்குவதால் தான் ஏற்படுகின்றது. கவிதை என்பது தன்னுடைய

கவித்துவப் பண்பினால் அது வெளியிடப்படும் பாங்கில் நுண்ணு ணர்வில் தலை காட்டும். நாடகத்தில், விமர்சனத்தில், சிறுகதை யில் நுண்ணுணர்வினூடாக வளர்த்தெடுக்கப்படக் கூடியது. சிறு கதை யிலே புதுமைப் பித்தன் தொடங்கிக் கண்ணதாசன் வரையிலும் கையாண்டிருக்கின்றார்கள். கவிதைத்துறை தேக்கமடைந்திருக்கின் றது என்று சொன்னால் ஏனைய துறைகளும் தேக்கமடைந்து இருக் கிறது என்ற சூழல் அமைந்தால்தான் ஒரு துறையில் அந்தத் தேக்கம் என்பது வரும். ஏனைய துறைகளில் மிகச் சிறப்பானதோர் அம்சம் காணப்பட்டால் கவிதைத் துறையில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை ஏனைய துறைகளில் எழுதப்படும் படைப்புக்களில் இருக்கக்கூடிய கவித்துவம், தூண்டல் என்பன புதிய புதிய கவிதைத் தன்மைகளை பரீட் சிக்கும் சூழலை ஏற்படுத்தும். அப்படி என்றால் ஒட்டு மொத்தமாக எல்லா இலக்கியப்போக்கிலும் ஒரு தேக்கம் இருக்கின்றது என்றே அர்த்தப் படும்.

**போராட்ட கவிதைகள் பல, சம்பவப் பதிவுகளாகவே காணப்படுகின்றன. இத்தகைய கவிதைகள் பற்றிய உங்கள் கருத்து நிலைப்பாடு யாது ?**

போராட்ட காலக் கவிதைகள் பல சம்பவப் பதிவுகளாகக் காணப்படுவதென்பது உண்மைதான். ஆவணத் தன்மையாக அது சுருங்கி விடுகின்றபோது இதனை ஒரு பத்திரிகை நிருபரே செய்து விட லாம். எனினும் அவர் ஆவணத்தைப் பதிவுசெய்யும்போது கலாபூர்வமான தன்மையோடு செயற்படுபவராக இருந்தால் படைப்புருவமாக்கிவிடலாம். இத்தகைய 'Faxtion' எனும் ஒரு புதிய வடிவத்தை மேற்கு நாடுகளில் உருவாக்கி இருக்கிறார்கள். இதனையே மு.தளையசிங்கம் 'மெய்யுள்' என்கின்றதாக உண்மை நடப்புகளுக்கு ஒளியூட்டும் வலுவான கலை யம்சத்தினை இணைப்பதனூடாகச் செய்தார். ஆவணப் பதிவாகக் கலைதேங்கி விடக்கூடாது. வரலாற்றில் இருந்து காத்திரமானவற்றை உள்வாங்காது விட்டுவிட்டு வெறுமனே பதிவு என்பதாக இல்லாமல் சமூ கத்தையும் கலையையும் பிணைக்கும் வகையில் சமூக இயக்கச் செயற் பாடுகளையும், தொழிற்பாடுகளையும் சமூக மாற்றத்தினையும் உள் வாங்கி புதிய வடிவங்களை நாம் உருவாக்க வேண்டும். நிலாந்த னின் படைப்புக்குள் யாவும் இவ்வாறு தான் அடையாளம் காணப் படுகின்றன. வன்னி மான்மீயத்தில் இம்மாதிரியான தன்மைகள்

காணப்படுகின்றன. உதயகுமார் என்ற ஒரு படைப்பாளியும் இத் தகைய முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார் என சில விமர்சனங்கள் ஊடாகப் படித்திருக்கிறேன்.

கனகரவி என்பவரின் 'இந்த மழை ஓயாதோ' கவிதை - அவர் ஒரு பத்திரிகை நிருபராக இருப்பவர். நிருபராக இருந்து சொல்லமுடியாத உணர்வுகளைக் கவிதையாக்க முயன்றுள்ளார். - சம்பவப் பதிவுக ளாகவே மாறிவிடும் தன்மையுடன் காணப்படுகின்றது. அவரிடத்தில் நல்ல கவிஞரும் உள்ளார் என்பதும் மறுப்பதற்கில்லை.

இதழியலாளராக இருப்பவர் ஒரு சம்பவத்தைக் காணும்போது ஒரு சாட்சிநிலை நோக்கில் இருந்து தான் பதிவு செய்கின்றார். மூன்றாம் நபராக விலகி நின்று பார்க்கின்றார். இதனைப் பல்வேறு துறைப் பரிச் சயத்தோடு கலாபூர்வமாக செய்யும்போது வேறு வகையானதோர் கனதி யைக் கொடுக்கின்றது. இது சம்பந்தமான வாதப்பிரதி வாதங்களும் எழலாம்.

**பலஸ்தீனக் கவிதைகள் ஆபிரிக்கக் கவிதைகள் போன்ற ஏனைய நாடுகளின் போரியல் கவிதைகளோடு ஒப்பிடுகின்றபோது ஈழத்துக் கவிதைகள் எத்தகைய இடத்தினை வகிக்கின்றன ?**

பலஸ்தீனக் கவிதைகள், ஆபிரிக்கக் கவிதைகள் போன்று எங்களுடைய நாட்டில் எழுதப்படவில்லை என்று சொல்ல முடியாது. அவற்றை ஒப்பிட்டு ஆய்வு செய்வதன்மூலமே ஒரு முடிவிற்கு வரலாம். "பலஸ்தீனக் கவிதைகள்" "ஆபிரிக்கக் கவிதைகள்" சிவசேகரம் அவர் களுடைய முயற்சியிலே மொழிபெயர்க்கப்பட்ட மூன்றாம் உலக நாடு களின் கவிதைகள் 'பனிப்பாலை' போன்ற தொகுப்புக்களை "மரணத் துள் வாழ்வோம்" காலம் எழுதிய வரிகள்" என்பவற்றோடு ஒப்பிட்டு நிகராக நிற்கக் கூடியனவா என ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். ஆனால் "மரணத்துள் வாழ்வோம்" போன்ற தொகுப்புக்கள் தொகுக்கப்பட்ட காலங்களில் தவறவிடப்பட்ட கவிதைகளும் உண்டு. எனவே சிறந்த தொகுப்பொன்றினை உருவாக்கியே ஆய்வுக்குட்படுத்தவேண்டும்.

"பலஸ்தீனக் கவிதைகள்" எல்லாம் முழுமையாக தமிழில் வந்து விடவில்லை. "ஆபிரிக்கக் கவிதைகள்" கணிச மானவற்றை சோ.ப.மொழி பெயர்ப்புச் செய்திருக்கின்றார். அதிலும்

போராட்டம் சம்பந்தப்பட்டவற்றையே மொழி பெயர்ப்புச் செய்திருக்கின்றார்கள். அதாவது எங்களுக்கு இசைவான பண்புகள் கொண்டவற்றை அவர் மொழி பெயர்த்திருக்கின்றார். போராட்டம் அல்லாத வேறு கவிதைகளில் தேசியப் பண்புகள் எப்படி ஒத்திருக்கின்றன எனவும் நோக்க வேண்டும்.

"மரணத்துள் வாழ்வோம்" தொகுப்பை அல்லது அவற்றுள் கூட்டிக் கழித்தோர் தொகுப்பை சுரேஷ் கனகராஜா , சோ.ப, சிவசேகரம் போன்ற இரு மொழிகளில் பரிச்சயமுடையவர்கள் மூலம் "பலஸ்தீனக் கவிதைகள்" "ஆபிரிக்கக் கவிதைகளுடன்" ஒப்பு நோக்கி ஆய்வு செய்வதால் தான் கண்டறிய முடியும். ஆனால் போராட்டம் தேசியப் பண்புகள் என்பவை தேசிய போராட்டகாலங்களில் எல்லா மொழிகளிலும் கொண்டு வரப்படுகின்றன என்றளவில் அவற்றோடு ஒப்பிடக்கூடிய வகையில் எங்களுடைய முயற்சிகள் இல்லை என்று கூற முடியாது.

சாதியப் போராட்டங்களில் ஈடுபட்டவராகவும் நீங்கள் இனங்காணப்படுகிறீர்கள் "தேசிய இனப் பிரச்சினையினுள்ளே சாதியம் மறைந்து விட்டதான" கூற்றை "தெணியான்" மறுத்துரைக்கின்றார். இதுபற்றி ...... ?

எங்களுடைய சமூகக் கூட்டத்திலே இன்னொரு சாராரை நாங்கள் ஒடுக்கி வந்திருக்கின்றோம் என்பது வரலாறு. சாதிய ஒடுக்கு முறைகள் மிக மோசமாக இடம்பெற்றுள்ளன. சாதி அமைப்பானது தொப்பூழ் கொடி உறவாகத் தொடர்ந்து வந்திருக்கின்றது. கோயில் மரபு சடங்குகள் போன்ற பல்வேறு கூறுகள் இணைந்த தமிழ் பண்பாட்டை நிறை பண்பாடென்று கூறி ஒரு கற்பிதத்தை உருவாக்கி வைத்திருக்கின்றோம். ஒடுக்குமுறை என்பதை ஒரு பண்பாடாகக் கூறமுடியாது. ஆனால் எங்கள் பண்பாட்டில் ஒடுக்குமுறையும் இருந்திருக்கின்றது.

"கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா " என்ற சித்தர் குரலும் " கோத்திரமும் குரலும் கொண்டு என் செய்வீர" என்று நாவுக்கரச நாயனாரின் உள்இருந்து ஒலித்த குரலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான நியாயத்தை நாடி நின்றன. இது "இரண்டாயிரம் ஆண்டு பழைய சுமை" என்று முருகையன் சொல்வார்.

ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலைப் போராட்டங்களில் பங்காளிகளாக இருக்கின்றார்கள். இவர்கள் அத்தனை பேரின் வாழ்வியலையும் போராட்டம் தன்பக்கம் எடுத்துக் கொண்டுள்ளது.

தேச விடுதலைப்போராட்டம் நிகழ்ந்து கொண்டிருக்கையில் இவ்வாறான மாற்றங்கள் ஏற்படவில்லை என "தெணியான்" போன்றோர் முற்றாக மறுப்பதும் தவறானதாகும். எனினும் "எல்லாம் முடிந்த பின்பு" சாதிய ஒடுக்கு முறைகள் மேலோங்கி வெளிப்படாது என்பதற்கு எவ்வித உத்தரவாத மும் இல்லை.

**மு.தளையசிங்கத்தின் வழிவந்த நீங்கள் தேவார, புராண, இதிகாச, காவிய மரபுக் கூறுகளை கவிதையில் கையாண்டுள்ளீர்கள். இது பற்றி .... ?**

தளையசிங்கம் , மு.பொ. போன்றவர்களின் வழிவந்தவனாக என்னை அடையாளம் காட்டுவதில் தவறில்லை. ஆனால் அவரவர்க்கு என்று தனியாக அமைந்த தனித்துவக் கூறுகளும் பண்புகளும் உண்டு. மு. தளையசிங்கம் எங்கள் மத்தியில் தோன்றியதொரு சிந்தனையாளன். அவர் பற்றிய தேடல்கள் அதிகரித்து வருகின்றன. சமூக மாற்றம் பற்றி சிந்தித்தவராகவும், ஆத்மீகத் தேடல் உடையவராகவும் சமகால தேசிய போராட்டம் உரிமை பற்றி சிந்தித்தவராகவும் அவர் காணப்பட்டார். தேவார புராண இதிகாச காவிய மரபுகளை நான் கையாண்டிருப்பது மு. தளையசிங்கம், மு.பொவின் பாதிப்பினால் மட்டுமல்ல. இப்பண்புகள் ஈழத்தின் மூத்த கவிஞர்கள் பலரில் காணப்படுகின்றன.

புராணங்களூடாகப் பெற்ற கருத்துருவாக்கத்தினை நவீன சமூகப் போக்கில் எவ்வாறு பொருத்திப் பார்க்கின்றோம் என்பதில் தான் புதிய சிந்தனை வெளிப்பாடுகள் வருகின்றன.

**நீலாவணனின் கவிதைத் தொகுப்பு முன்னுரையில் 'ஆத்மார்த்தம் ஒற்றைப் பரிமாணம் உடையது" என்ற எம்.எ.நுஃமானின் கருத்தை ஏற்றுக் கொள்கின்றீர்களா?**

ஆத்மார்த்தம் என்பது உண்மையில் ஒற்றைப் பரிமாணம் உடைய ஒன்றல்ல. ஆத்மார்த்தம் என்பதை அர்த்தப் பொதிவோடு கையாண்டவர் மு.பொ. அவர்கள். ஆத்மார்த்தம் என்பதை எங்கோ மேலே ஒதுங்கிப் போய் நிற்கின்ற ஒன்றாகக் காணாமல் அன்றாட வாழ்வில் கவனிக்கப்படாமல் போன பௌதீகப் பொருட்களுக்குக் கூட உயிரேற்றம் செய்கின்ற ஒன்றாகக் காணுகின்றார். அதாவது தன்னைச் சார்ந்த உறவுகளில் இருந்து தன்னைச் சார்ந்த இயற்கை வரைக்கும் முழுவதையும் ஒன்றாகப் பொருத்திப் பார்க்கின்ற உயர்மன நிலைக் கலையாக்கத்தின் பண்பாகவேதான் கண்டார்.

உதாரணமாக

" அண்ணாந்துபார்க்கையில் அங்கே கரும்பருந்து
பண்ணாய் விசும்பில் படரும் சுருதியில்
ஏதோ கனவை இயற்றத் தொடங்குகின்றேன் "

பண்ணாய் விசும்பில் படரும் சுருதி என்பது மேலேறி இருக்கின்ற ஆத்மார்த்தமான உணர்வு. பருந்தின் மிதப்பில் "கொய்ங்ங்ங் .... " என்று சுருதி எழுப்பிக் கொண்டிருக்கும் தன்மையை அவர் அழகாக படம் பிடித்துக் காட்டுகின்றார். பின்னால்,

" பிஞ்சு மனதைப் பிசைய மறுகணமே
பென்சிலெடுத்து எச்சில் பெய்து சுவரெல்லாம்
நெஞ்சில் உருண்ட நினைவுக்கு தொட்டிலிட "

என்று தொட்டிலுக்குக் கொண்டு வந்து விடுகின்றார். பண்ணாய் விசும்பில் படரும் சுருதியாக இருந்தது. தொட்டிலுக்கு வந்து தாலாட்டில் கலக்கின்றது. மேல் எழுகைக்கும் பௌதீகப் பொருளுக்கும் இடையே இழையோட்டத்தை உண்டு பண்ணுகின்றது. இப்பண்பு ஒற்றைப் பரிமாணம் அல்ல என்பது தெட்டத் தெளிவாகின்றது.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் கவிஞர் சு.வில்வரத்தினத்தின் பங்களிப்புப் பற்றி , உங்கள் விமர்சனங்களைக் கூறுவீர்களா ?

என்னுடைய பங்களிப்புப் பற்றி நான் பேசுவதைவிட பிறர் பேசுவதுதான் அழகு. நான் பெற்ற எல்லாப் பிள்ளைகளுமே நல்லது என்ற மயக்கம் என்னிடம் இருக்கக் கூடும். காலம் வரும்போது , அறிவு பூர்வமான பார்வையோடு என்னையே நான் விலகி நின்று கணிப்புச் செய்தால் கண்டறியலாம். அண்மையில் 'தீராநதி' சஞ்சிகையில் "உயிர்த் தெழும் காலத்திற்காக" தொகுதியினைப் பற்றி அ.ராமசாமி எடுத்துரைத்த கருத்துக்கள் நோக்கத்தக்கவை. "இருபத்தைந்து வருடகால வரலாற்றில் சு.வில்வரத்தினம் பல கேள்விகளை எழுப்பி அலையவிட்டிருக்கின்றார். இக்கேள்விகள் நடந்து கொண்டிருக்கின்ற போராட்டங்கள் முடிந்த பின்னாலும் கூட ஒலித்துக் கொண்டிருக்கும் " எனக் குறிப்பிட்டுள்ளார். கவிதையை கலா முயற்சியாக மட்டும் கருதாது வரலாற்றியல் மாற்றமாகவும் கூறியுள்ளார். இதற்கப்பால் நான் என்ன கூறுவது ... ?

# கொடுப்பினை

த. ஜெயசீலன்

வானம் கசிந்து வழிகிறது துளித்துளியாய்
மோனம் ஒருபறைபோல்
மூலையிலே கிடக்க.....அதை
வானத் துளிகளெல்லாம் 'வாசிக்கு' தொரு சீராய்
இந்த இளம் அந்தி
இப்படியே நசநசென்று
சத்தங்கள் மாறாமற் சிணுங்கிக் கிடக்கிறது.
ஓலைக் குடிசையின்மேல்
ஒவ்வோர் துளிவிழுந்து
பேசிக்கொண் டுள்ளனவோ தமது பெருமைகளை ?

சூரியன் உறுஞ்சிச் சுவைத்ததனை: விண்வெளியிற்
தப்பியதை;
குளிரிற் துளிர்த்தொடுங்கித் துளியாகி
நூறு பனையுயரத் திருந்து உதிர்ந்ததனை;
உற்சாகப் பயணத்திற் சேர்ந்து 'வீழ்ந்த பயணிகளில்'
சில சிப்பி வாயினுள்ளும்,
சில நெல்லின் காலினிலும்,
சில பொட்டல் வெளியினிலும்,
சில உப்புக்கடலினிலும்

சில ஏழைத் தலையினிலும், சேர்ந்த...அவற்றினது
கொடுப்பினையை ;
தாம் என் கூரையின் மேல் ஒழுகியதைப்....;
பேசிக்கொண் டிருந்திடலாம்.!
பேச்சற்று நானிருந்தேன்.


ஊரினது எல்லையிலே ‘உறங்கும் கல்லறைகளினது’
வேர்துளிர்க்க வீழக்
கொடுத்துவைத்த துளிகளது
முகமறியாப் போதும்..... ‘அவை’ “வாழ்க”வெனக்
கவி வரைவேன்

## பலன்

ஒவ்வொரு பயணத்தின் பின்னும்நான்
கண்டுகொண்டேன்.
சிரமமின்றி,
நின்று நெருக்குவாரப் படுதலின்றி,
மூச்சுத் திணறலின்றி, வாந்தி எடுத்தலின்றி
பயணிக்கும் பாக்கியத்தைப் பெற்றவைகள்......
வண்டிகளுள்
ஒலிபரப்பப் படுகின்ற
பாடல்கள் மட்டுந்தான்

# விடுபடல்

தாட்சாயணி



சந்தியா காத்திருந்தாள். நேரம் ஐந்தை நெருங்கிக்கொண்டிருந்தது. கால் மணிநேரத்துக்கும் கூடுதலாகக் காத்திருந்தாள். இவளோடு நின்றவர்கள் ஒவ்வொருவராய்க் கரைந்திருந்தனர். ஒவ்வொரு பஸ்ஸூம் ஒவ்வொருவரை ஏற்றிப்போயிற்று. இவள் ஏறவில்லை. சனங்கள் அதிகமென்றில்லை. ஏறியிருக்கலாம். ஏறவில்லை. அடிக்கடி மணி பார்த்துக் கொண்டு காத்திருந்தாள். இப்போது இன்னும் கொஞ்சப்பேர் புதிதாகச் சேர்ந்திருந்தனர். சற்றுத் தூரத்தில் மெல்லிய பையனொருவன் நடந்து வந்துகொண்டிருந்தான். பதினேழு, பதினெட்டு வயது இருக்கக் கூடும். இடையிடையே கண்ட ஞாபகம். வெள்ளைச் சீருடையோடு புத்தகப்பை கனக்க வந்து கொண்டிருந்தான். கிட்டே வந்தவனைப் பார்க்கையில் கண்களில் களைப்புத் தெரிந்தது. இவள் சினேகமாய் முறுவலித்தாள். அவனும் பதிலுக்குச் சிரித்தான்.

'இன்னும் பஸ் வரேல்லையோக்கா...?'

'வான் ரெண்டும் ஒரு பஸ்ஸூம் போகுது. சரியான கிறவுட்..'

ஆனால் அது காரணமில்லை என்பது அவளுக்குத் தெரியும்.

"மூண்டையுமா விட்டீங்கள்....." அவன் கண்களில் வியப்புத் தெரிந்தது. இவள் எதிர்ப்புறம் நோக்கியதிசையில் கண்களைச் சுருக்கிப் பார்த்தாள். கண்ணெட்டும் தொலைவிற்கு எதுவும் இல்லை. வானத்தில் இரைச்சல் எழுந்தது. நிமிர்ந்து பார்க்கையில் முன்புறம் விரிந்து கிடந்த எல்லையற்ற வானில் நூற்றுக்கணக்கான வெளவால்கள் பறந்து கொண்டிருந்தன. இளநீல வானத்தை மறைத்துப் பெரிய, கரிய சிறகுகளை விரித்துப் பிடித்தபடி வெளவால்கள் பறந்தன.

'எவ்......வளவு வெள....வால் அக்கா....'

அவன் அதை இப்போதே கண்டிருக்கக் கூடும். இவளோ வெனில் தினமும் ரசிக்கின்ற காட்சிதான். ஏதோ ஒரு கணத்தில் அந்த வெளவால்கள் இயல்பான தொங்குதலினின்றும் கலைக்கப்பட்டுச் சிதறுகின்றன. அந்த கணமும் இவள் பஸ்ஸிற்குக் காத்திருக்கும் கணமும் ஒன்றித்துப் போகையில் இவள்முன் அற்புதமான காட்சியல்லவோ விரிகின்றது.

ஒருகணம் ரமணனோடு பஸ்ஸிற்குக் காத்திருப்பதில் சந்தோஷமாய்க் கூடவிருந்தது. (தெருவோடு போன பள்ளிக்கூடப் பையன்கள் அவனைப் பெயர் சொல்லி அழைத்ததில் அவன் பெயரும் தெரிந்து போயிற்று.) வினோத்திடமிருந்து இவ்வாறான ரசனைகளை எதிர்பார்க்க முடியாது. அவன் அவசரக்காரன். அவனுடைய ஆர்வங்களெல்லாம் இயந்திரங்களை அக்குவேறு, ஆணிவேறாக பிரித்துப் போடுதலில் தானிருந்தது. வீட்டில் ஒரு பொருள் உருப்படியாய்க் கிடக்காது. எல்லாம் துண்டு, துண்டாய்த்தான் கிடக்கும். அப்படிப்பட்ட இவனுக்கு இவளுடைய ரசனைகள் பைத்தியக் காரத்தனமாய்த் தானிருக்கும். எட்டுவயசு வித்தியாசம். தலைமுறை இடைவெளிபோல இந்த எட்டுவயசு வித்தியாசமும் ரசனையை மாற்றுமோ? வினோத்துக்கு அடுத்தவள் அகல்யா. அவளுக்கும், அவனுக்கும் இரண்டு வயதே வித்தியாசம். அவளோ அண்ணனோடு சேர்ந்து இவளோடு மல்லுக்கட்டுவதே வழக்கம்.

"இதுகளோட சரிக்குச் சமனா வாதாட எனக்குக் கிட்ட வயசிலை, ஒரு அண்ணனையோ, அக்காவையோ பெறாமல் போனீங்களே அம்மா...."

இவள் தாயிடம் சிணுங்கியிருக்கிறாள். பிரச்சினை அநேகமாய் பாட்டுக்கேட்பதில் தான் தொடங்கும். வினோத்தின் கைங்கரியம்.

பற்றிகள்' தடுக்கப்பட்ட யுத்தகாலங்களில் கூட வானொலி கேட்க முடிந்தது. சைக்கிள் டைனமோவைச் சுழற்றி செய்திகளும் பாட்டுக் களும் கேட்க வழி செய்திருந்தான். அவன் அறிவுத்திறன் வாழ்க. அந்தத் திறமையின் உச்சம் இப்போது அவனைப் பொறியியல் பீடத்தில் நிறுத்தியிருக்கிறது. அது கிடக்க, அவர்களின் ரசனை, இவளுக்கு எதிர்ப் பதமாயிருந்தது. இவளது ஈர்ப்பு இளையராஜாவினது இசையையும், இடைக்காலப் பாடல்களையும் நோக்கிக் குவிந்திருந்தது. அந்த மென் மையான இசையில் லாகிரியில் மனதை லயிக்கவிட்டு மயக்கம் மீதூர ரசித்திருக்கவே விருப்பம். அந்த ஒரே ஒரு விஷயத்தில் மட்டுமே அவ ளுக்கென்று தனிப்பட்ட விருப்பம் இருந்தது. மற்றப்படி ஆடையோ, அணிகலனோ எதிலும் அம்மாவின் விருப்பத்தோடு அவள் மாறுபட்ட தில்லை.

வினோத்தும், அகல்யாவும் துள்ளிசைப் பிரியர்கள். மென்மை யான இசையை விழிமூடி ரசிக்கும் பக்குவம் கைவரப் பெறாதவர்கள். பொங்கும் இசையை வழியவிட்டுக் கொண்டு வினோத் கணக்குச் செய் வான். அகல்யாவுக்குப் பாட்டு இல்லாவிட்டால் புத்தகம் விரிக்கப் பிடிக் காது. பாட்டு ஒருபக்கம் போய்க்கொண்டிருக்க இவள் படித்துக் கொண் டிருப்பாள். படிக்கிறாள் தானேயென்று வானொலியைத் திருப்பி இவள் தனக்குப்பிடித்த பாட்டிற்கு மாற்றுவாள். அதற்குள் எங்கிருந்தேனும், வினோத்தோ அகல்யாவோ வந்து விடுவார்கள். 'என்னக்கா....பாட்டு இது..." என்பதாய் அவளைக் கேலி செய்துவிட்டு, புதிய பாட்டுகளின் பக்கம் மறுபடியும் வானொலியை முடுக்குவார்கள். அவளது ரசனை உள்ளுக்குள்ளேயே கொஞ்சம் கொஞ்சமாய் கருகிக் கொண்டிருந்தது.

"ரெண்டு குட்டிப்பிசாசுகளும், எனக்கெண்டு வந்து வாச்சுதுகள்.... விருப்பமான பாட்டுக்கேட்கக் கூட ஏலாமல் கிடக்கு..."

அவள் அம்மாவிடம் முணுமுணுப்பாள். எப்போதேனும் இடை யிடையே புதுப்பாடல்கள் எந்த அலைவரிசையிலும் கிடைக்காத வேளை யில் இவளுக்கு அமிர்தமாய் இடைக்காலப் பாடல்கள் கிடைக்கும். அப் போதேனும் அவளை அமைதியாய் ரசிக்கவிட்டால் போதாதா...? இவ ளைக் கேலி செய்து, சளசளவென்று அவர்கள் பேசிக்கொண்டே இருக் கையில் இவளால் அந்த இரைச்சலுக்கிடையில் தனக்குப்பிடித்த பாடல் களைக் கூட ரசிக்கமுடியாமல் போகும்.

"இந்த வீட்டை விட்டு எங்கையாவது போடுவன்...."

எரிச்சல் தாளாது சீறியிருக்கிறாள்.

"எங்கே போகப் போறாவாம்....." வினோத்தும், அகல்யாவும் தமக்குள் கண்சிமிட்டிச் சிரித்து அந்த வார்த்தைகளை வைத்தே அவளை அறுத்தெடுத்திருக்கிறார்கள். விடுபடத்தான் வேண்டும் இவர் களது ரசனையிலிருந்து அவளுக்கென்று ஒரு வாழ்க்கை அமைகின்றபோது அதில் அவளது ரசனைகளுக்குத் தானே மதிப்பிருக்கும். அப்படி இன்னொரு வாழ்விற்குப் புகும் வேளையில் இவர்கள் கேலியினின்றும், அவர்களுக்குப் பிடித்த நவீன துள்ளிசைகளினின்றும் விடுபடமுடியாமலா போகும்? அப்போது அவளது இனிய கானங்களூடு....தொடர்ந்த கனவுகளில் ....அந்த குறும்புச் சகோதரர்களின் கேலிகளைப் பொறுமையோடு தாங்கியிருந்தாள். விடுபட முடியும் என்ற நம்பிக்கைகளூடு....

"அக்கா, பஸ் ஒண்டு வருதக்கா...?"

ரமணனின் குரல் அவளைத் திருப்பியது. தூரத்தில் மஞ்சள் புள்ளியாய்த் தெரிந்த பஸ் வரவரப் பெரிதாகிக் கொண்டு வந்தது. இவள் கண்களைச் சுருக்கி ஊடறுத்துப் பார்த்தாள். சனங்களுக்கிடையே இடைவெளியிருந்தது.

"அது கனகம்புளியடி பஸ்ஸக்கா..."

ரமணன் சோர்ந்து போய்ச் சொன்னான். இவர்கள் இருவரையும் தவிர, மற்ற எல்லாரும் பஸ்ஸில் ஏறிக்கொண்டார்கள்.

இப்போது வெளவால்கள் திரும்பவும் மரங்களில் தொங்கிக் கொண்டிருந்தன. வானம் வெறிச்சிட்டுக் கிடந்தது. வெளேரென்ற நிறம் நீங்கிச் சற்றே கருநிறம் திரண்டது. ஒன்றிரண்டு துளிகள் இடைவெளி விட்டு விழுந்தன.

"மழை வரப் போகுதக்கா..." அவன் முணுமுணுத்தான்.

"ஹாய் ..." மனம் சந்தோஷக் கூத்தாடிற்று. கையில் குடை இல்லை. எனினும் மழை என்றதும் ஒரு சந்தோஷம். வானில் கூடிய மேகம் கலைந்து விடக்கூடியது என்பது தெரிந்தேயிருந்தது. சாதாரண தூறல்பட்டதும் உலர்ந்து விடும்படியாய், ஆங்காங்கு ஒன்றிரண்டு துளிகள் வீழ்ந்தன. இவள் நிமிர்ந்தாள். சந்தோஷமாய் ஒரு ஈரலித்த புன்னகை. சொத்தென்று ஒரு ஈர நீர்த்துளி நெற்றிப்பொட்டில் விழுந்து அவள் குங்குமத்தைக் கரைத்தது. சிவப்பாய் கசிந்து

இமையோரங்களில் கசிய ஆரம்பித்தது. "அக்கா, பொட்டு கரையுது..." அவள் கைக்குட்டையை எடுத்துக் குறிப்பாய் நெற்றியின் இமையோரங்களைச் சீராக்கி ஒற்றிவிட்டு "சரியோ.... ?" என்றாள். அவன் தலையசைத்துச் சிரித்தான். மழை வந்த வாக்கில் போய் விட்டது போறபட்டது.

"குடை கொண்டந்திருந்தால் இந்த மழை இப்பிடியே பெய்யிறது தான் நல்லம். குடை இல்லாத படியால் மழை போனது தான் நல்லம்" அவன் சொல்ல இவளுள் லேசான பரவசம். அவள் நினைத்ததை அவன் அப்படியே சொல்கின்றானே. இருவரது மன அலைவரிசைகளும் ஒன்று தானோ .... ?

'சனி ஞாயிறு என்ன செய்யிறீர் ... ?"

"வயலின் கிளாசுக்குப் போறன் .... "

அவள் அவனை வியப்பாய்த் திரும்பிப் பார்த்தாள்.

"பாடுவீரா... ?"

"ம்..." அவன் அடக்கமாய்த் தலையசைத்தான்.

"ஆரிண்டை பாட்டுப் பிடிக்கும் ..... "

"ஜேசுதாஸ்.... ஜானகி.... "

இவள் விழிகள் விரிந்தன.

"பாலசுப்பிரமணியம் பிடிக்காதோ...... ?"

"ம்ம்ம்... நல்லாய்ப் பிடிக்கும்..."

என்று சிரித்தான். இவளுள் சிவானந்தனின் நினைப்புக் கிளர்ந்தது. அவனுடனான ஆரம்ப தினங்கள் எத்தனை ஆர்வமாய் அதை எதிர்கொண்டாள்.

இனிமேல் வீட்டிலுள்ள 'குட்டிப் பிசாசுகள்' இரண்டினதும் பிடி அகன்ற சந்தோஷத்தில் அவனோடு அவளுக்குப் பிடித்த பாடல்களில் நனையலாம் எனும் சந்தோஷமும் கூட..... நிலவு காலிக்கும் மணல் முற்றத்தில் அவனோடு மோனத்தில் இணைந்து இந்த கானங்களை உள்வாங்கலாமென்று...இவளது ரசனைகளுக்கு அவன் இசைந்து கொடுக்காமலா போவான். ஆனால் இவளது உணர்வுகள் அவளே எதிர் பார்க்காத படிக்கு சிதறிப்போயின. சிவானந்தன் மோசமானவனில்லை. குடிப்பதில்லை. இவளை அடிப்பதுமில்லை. எனினும் இனிமை

"தரமான பொருள் வாங்கல் நுகர்வோன்
உரிமை நிறைவேற்றி வைப்பதுதான்
**மதுஷனின் பெருமை** "

# மதுஷன் பல்பொருள் வாணிபம்

**சந்தை வீதி , உடுப்பிட்டி .**

❋ பலசரக்குப் பொருட்கள்

❋ கோவில் அபிடேகப் பொருட்கள்

❋ கட்டிடப் பொருட்கள்

**எனப்பல விதமான பொருட்களின்**
**மொத்த சில்லறை வியாபாரத்தின்**
**முன்னோடி நிறுவனம்**

கோவின்பால் கொண்ட விருப்பால் வந்த நட்பால்
நாவின்பால் சொட்டும் ஆவின்பால் வைத்த அன்பால்
களைப்பால் - இனிப்பால் எனக் கேட்டால் வரும்பால்
தமிழ்ப்பால் போல் சுவைப்பால் குறைந்த விலைப்பால்.

# பால்சாலை



உடுப்பிட்டிச் சந்தி, உடுப்பிட்டி

தவிப்பால் - வந்த
முனைப்பால் - பெற்ற
உழைப்பால் - கல்வி
இருப்பால் மலைப்பால் என
வரும்பால் - வள்ளுவன்
கடைப்பால் போல் சிறப்பால் - விற்கும்
தனிப்பால் எப்பால் ?

**இங்கு வந்தால் விடை உன்பால்**

அறிவுப் பசி தீர்க்கும் அட்சய பாத்திரம்
தேடித் திரிகிறதா தினமும் உங்கள் நேத்திரம்

பாடசாலைப் பொருட்கள் பற்றி எங்களது தோத்திரம்
"மாணவர் கல்விக்கு மலிவு விலையில் மாத்திரம்"



# சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை



பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

"கல்வித் தேன் சொட்டும் நூல்களின்
புதுவனம்
பள்ளிக் கனவுகளில் பங்கு கொள்ளும்
நிறுவனம்"

# சந்திரன்

## தொலைத் தொடர்பு நிலையம்

**உள்நாடு : 070-213216**
**வெளிநாடு : 0094 70 213216**



உரிமையாளர் : கி.கணேஷ்
உடுப்பிட்டி வீதி,
தொண்டைமானாறு
(றெட்றோஸ்பாம்)



---

# SHOTOKAN KARATE



**Do International Federation**
**- Sri Lanka -**

**R.Kanesamoorthy**
1982, Black Belt. Champion
Point Pedro - Shotokan
Karate Association

**K.Shandrakumar**
Black Belt Champion
Uduppiddy Road, Thondaimanaru
Shotokan Karate Association

யான வாழ்விற்கு அவை மட்டுமே போதுமாகி விடுமா ?

இரவுகளில் மௌனமான நிசப்தம் உறைந்த வேளைகளில் இனிய ரசந்ததும்பும் பாடல்களை அவனது அணைப்போடு பருக விரும்பினாள் அவள். அவனோவெனில் அவற்றை ரசனைத்தனமாய் நுகர்தலை விடுத்து, துள்ளிசைப் பாடல்கள் ரீங்காரிக்க அவளை ஆங்காரமாய் ஆட்கொள்ளுதலிலேயே கண்ணாயிருந்தான். போகட்டும் அவனது ரசனைதான் வேறாயிருந்தது. அதற்காக அவனுடைய ரசனையையே அவள்மீதும் திணிக்க வேண்டுமா ? அவள் அவனிடம் சில பாடல்களை எழுதிக் கொடுத்து 'கசற்' அடித்துக் கொண்டு வரும்படி கொடுத்திருந்தாள். மாலைவரை ஆவலோடு காத்திருந்தாள். அவன் ஒரு புன்னகையோடு வந்தான். அவளிடம் 'கசற்' றைக் கொடுத்து விட்டு அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தான். இவள் ஆவலாய் 'ரேப் றெக்கோடரில்' அதைச் செருகினாள். அவன் அவளது முகத்தையே குறும்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

ரேப்பில் ஏதோ கறகறா சத்தம். ஏதும் பிழையோ ..... ? இவள் யோசிக்கையில் பாட்டு ஒலித்தது.

"சும்மாச் சும்மா பார்த்துப் பாத்து... சும்மா சும்மா பேசிப் பேசி..."

சும்மா சும்மா வென்றே போய்க் கொண்டிருந்த பாட்டில் இவள் முகம் சுருங்கிப் போயிற்று.

"எப்பிடிப் பாட்டு... ? "

"நான் இதை அடிக்கச் சொல்லேல்லையே ..."

"இதை அடிக்கச் சொல்லேல்லைத்தான். ஆனால் அந்தப் பழங் காலப் பாட்டுக்களை உமக்கொராளுக்காக அடிச்சு ஏன் 'கசற்றை' வீணாக்குவான்..? இதெண்டா நிலாந்தியும் கேப்பாள்.... அது தான் புதுப்பாட்டுகளா அடிச்சு வந்தன்..."

இவளுக்குள் விடுபட்ட உணர்வு பொசுங்கிப் போனது. தம்பி தங்கையரின் ரசனையிலிருந்து விடுபட்டதாய் எண்ணுகையில் இங்கே இன்னுமொரு தளை பின்னப்பட்டு விட்டதோ ... ?

தூரத்திலே ஹோணின் சத்தம் கேட்டது. இவள் திரும்பிப் பார்த்தாள். பஸ்ஸின் இலக்கத்தைப் பார்ப்பதை விடவும். ட்றை

வரின் இருக்கையைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வம். அந்தக் கண்களுக்கிடையே மின்னியது. பஸ் அருகாகிக் கொண்டு வந்தது. ட்றைவரின் உருவமும் கண்ணாடியூடு மங்கி, மங்கிப் பிரகாசம் கொண்டது. ஒரு கறுப்பு ரீசேட் போட்டிருந்தான். இளைஞன் தாடி வைத்திருந்தான். அப்பாவித்தனமான கண்கள். இவளுக்கு அப்பாடா என்றிருந்தது. அரைமணி நேரம் காத்திருந்ததற்கு கைமேல் பலன் கிடைத்து விட்டது.

இப்போதெல்லாம் வீட்டுக்குப் போக நேரமாகி விடுகிறது "ஏன் சந்தியா இவ்வளவு நேரம்...? " சிவானந்தன் 'கசற்'றுகளை மாற்றி மாற்றிப் போட்டபடி இவளைக் கேட்பான். இவளுள் வேதனை நெட்டி முறித்துப் பொங்கும். என்றாலும் அந்த இனிய பயணச்சுகத்தை இழக்க மனம் வராது. எனவே ஒவ்வொரு தடவையும் பஸ் சனங்களால் நிரம்பி வழிவதாய்ச் சொல்லிக் கொள்வாள். அவன் அதற்குப் பிறகு எதுவுமே கேட்கமாட்டான். இவளுக்குப் பரிதாபம் தான் மிஞ்சும். எனினும் இருவரின் ரசனைகளும் வேறுபட்டுப் போனபின் அவளுக்காக அவன் விட்டுக் கொடுக்காமல் இருப்பதை அவன் தானாகவே உணராமலிருக்கும் பட்சத்தில் இது இப்படியே தொடரவேண்டியது தான் எனத் தோன்றும். அவனுக்காக நீ விட்டுக் கொடுத்தால் என்ன என உள்ளுக்குள் முரண்டிற்று மனம். விட்டுக் கொடுக்காமலென்ன ... ? தினம் தினம் விட்டுக் கொடுத்து, அவள் தானே சகித்துக் கொண்டு போகிறாள். இது சாத்தியமாகாத வரையில் அவன் அவன் ரசனையோடும், இவள் இவள் ரசனையோடும் இருக்க வேண்டியது தான். ஒருவர்மீது மற்றொருவர் ஏன் ரசனையைத் திணிக்க வேண்டும்.

"பூங்கதவே.... தாள் திறவாய் ... பூவாய்... பெண் பாவாய்... " பஸ்ஸுக்குள் ஏறியவுடன் உள்ளெழுந்து செவிகளுள் தேனமுதாய்ச் சொரிந்தது பாடல். இவள் ரிக்கெற்றை எடுத்துக் கொண்டு இருக்கையொன்றில் வாகாய்ச் சாய்ந்துகொண்டாள். பஸ் போகிற சாலையில் கண்களை மிதக்கவிட்டாள். சற்றே திரும்பியபோது ரமணன் கண்களில் கனவு மிதக்க பாடலை முணுமுணுப்பது தெரிந்தது. புன்னகைத்தாள். முன்னிருக்கையில் ட்றைவர் மிக நிதானமாக, ரசனையோடு பஸ்ஸை செலுத்துவதாய்ப்பட்டது. அவனைத் தெரியும். இப்படித்தான் ஒருநாள் பஸ் ஏறிய பொழுதில் அவன் மிக இனிய அவளுக்குப் பிடித்

தமான பாடல்களையே மாற்றி மாற்றிப் போடுவதைக் கண்டுபிடித்த பிறகு இதுவே அவளது வாடிக்கையான பஸ் ஆகிவிட்டது. 'இதயக் கோவில்' பாட்டுகளுக்காகவும், இளையராஜாவின் இசைக்காகவும் அவள் இந்த பஸ்ஸைத் தவற விடுவதில்லை

அவள் சாய்ந்திருந்த இரட்டை இருக்கையில் அமர்ந்திருந்த பெண் இறங்குவதற்கென எழுந்தாள். இவள் அந்த இருக்கையில் அமர்ந் தாள்.

"யார் தூரிகை செய்த ஓவியம்..." பாடல் இவளுள் தேன் வார்க்க ஒரு குரல் குறுக்கிட்டது.

"துலையாலையே பிள்ளை ....." இவள் எரிச்சலோடு திரும்பி னாள். பக்கத்திலே அமர்ந்திருந்தது. தூரத்து முறையான ஒரு மாமி.

பஸ்ஸிலாவது விரும்பிய பாட்டுக்களை ரசிக்க முடியாதோ ... ? அவள் எரிச்சலோடு 'வேலையாலை.... " என்றாள். இந்த மாமியிடமிருந்து எப்போது விடுபடுவது ?

இருக்கையோடு சாய்ந்து கண்களை மூடி தூக்கம் கொள்வ தாய்ப் பாசாங்கு செய்தாள். பாடல்கள் காற்றோடு கரைந்து கரைந்து போயின. இவள் விழிமூடியபடியே ரசித்துக் கொண்டிருந்தாள்.

"சரி பிள்ளை , நான் இறங்கப் போறன்.... " அப்பாடா எனத் தோன்றிய அமைதியில் பெருமூச்சு விட்டாள். மாமி விலகிப் போகத் திரும்பி ரமணனைப் பார்த்தாள். ஜன்னல்கரையில் தள்ளி உட்கார்ந்த வாறே 'இருமன்' என்றாள். அவன் அருகில் அமர்ந்தான்.

" நிலவு தூங்கும் நேரம் நினைவு தூங்கிடாது ..... " மென்மை யான இசை வருடத் தொடங்கியது.

"எனக்குப் பிடிச்ச பாட்டுகளக்கா .... " அவள் சிரித்தாள்.

"இந்தப் பாட்டுகளைக் கேக்கிறதெண்டால் விடிய ஏழரைக்கும், பின் னேரம் அஞ்சேகாலுக்கும் இந்த பஸ்ஸைப் பிடிக்கோணும். ட்றை வரைப் பாத்து வைச்சாச் சரி..... "

"அப்ப நீங்களும் இதிலையோ வாறனீங்கள்.... ? "
அவள் வெட்கமாய்ச் சிரித்தாள்.

" கண்ணே கலைமானே " பாடத் தொடங்கியபோது அவன் எழுந்தான்.

"ஐயோ அக்கா இந்தப் பாட்டை இப்பிடியே விட்டிட்டுப் போக மனமில்லையே ..... "

"பயப்பிடாமற் போம்... நான் அதைப் பத்திரமா வாங்கி நாளைக் குக் கொண்டாறன்..... " குதூகலமாய்ச் சிரித்தாள். அவன் அவளைப் பிரியமாய்ப் பார்த்துவிட்டு மணி அடித்தான். பஸ்ஸின் வேகம் குறைந்து கொண்டிருக்கையில் ரமணன் ட்றைவரிடம் கேட்டான்.

"நாளைக்கும் நீங்கள் வருவீங்கள் தானையண்ணை.... "
"ஓமோம்..." ட்றைவர் சிரித்தபடி பஸ்ஸை நிறுத்தினான். ரமணன் இவளைத் திரும்பிப் பார்த்து " இதிலைதான் வருவனக்கா...." என்றபடி கீழே இறங்கினான். சந்தோஷமாய்க் குதித்தபடி அவன் போவது பட்டது.

இவள் மீண்டும் ஜன்னலோரம் கண்களை மூடிச் சாய்ந்து கொண்டாள். இந்த மூவரின் கூட்டுறவும் ஒரு ரசனையின் புள்ளியில் ஒருங்கிசைவாய்த் தோன்றிற்று. இந்தப் புள்ளியில் ஒன்றிணைய முடியாத சிவானந்தனின் முகமும் ஏனோ அடிக்கடி மனதில் அலைப்புற்றது. அவன் இப்போது தனது ரசனைப் புள்ளிகளால் இணைந்த பாடல்களில் லயிப்புற்றிருக்கக்கூடும்

இவள் மனதில் "வளர்பிறை என்பதும் தேய்பிறை என்பதும் நிலவுக்குக் கிடையாது.... " ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

அவள் அந்த அரைமணி நேரம் தந்த பிரயாணத் திருப்தியோடும் விடுபட்ட உணர்வோடும் பஸ்ஸை விட்டு இறங்கத் தயாரானாள்.

# ஹைக்கூ கவிதைகள்

* ஓய்வு பெற்ற "ஆமி"யை
உறுத்தியது
மகளின் பள்ளிச்சீருடை

* யுத்தத்தில்
எலும்புக்கூடுகளும்
இடம்பெயரும்
செம்மணி

* பிரம்பு முறிந்தது
கவலையோடு ஆசிரியர்
பிள்ளை இதயம்

* ஓரினச் சேர்க்கைக்கு
ஒத்துழைக்க மறுத்தது
செருப்பு

* முன்னேறும் இராணுவம்
உறங்கும் போராளிகள்
கல்லறைகள்

* இராமருக்கு கோயில்
பாபருக்கு மசூதி
கடவுளுக்கு ?

* பட்டமளிப்பு விழா உரை
சிரித்தான்
வேலையில்லாப் பட்டதாரி

* தூரத்து வெடிஓசைகள்
தீக்குளித்தது
தாய் இதயம்

* துள்ளி எழுந்தது
சோம்பல் முறித்த மனம்
இசை

* காற்றே வீசாதே
பூமர நிழலில்
அகதிகளின் கஞ்சிப்பானை.

இ.சு. முரளிதரன்

# நீலாவணன்

த.வாகீசன்



கிழக்கிலங்கையின் தென் கோடியாகிய கல்முனைப் பிர தேசத்தில் பெரிய நீலாவணை எனும் கரையோரக் கிராமத்திலே பிறந்தவர் நீலாவணன். 31.06.1931 இல் கேசகபிள்ளைக்கும் தங்கம்மாவுக்கும் பிறந்த சின்னத்துரை, தான் பிறந்த ஊர்மீது கொண்ட பற்றின் காரணமாகவே நீலாவணன் என்று புனைபெயர் வைத்துக் கொண்டார். கவிதை, சிறுகதை, உருவகக்கதை, பா நாடகம், காவியம், கட்டுரை என்னும் பலவாறான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தாலும் கவிதைத்துறையே அவருக்கு புகழீட்டிக் கொடுத்தது. ஈழத்துத் தமிழ்க்கவிதை அறுபதுகளின் ஆரம்பத்தி லிருந்தே புதிய பரிமாணங்களைப் பெற்று வளர்ந்தது என்பது சகலராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயம் இக்கவிதை வளர்ச்சிக்கு நீலாவணன் ஆற்றிய பங்களிப்பு மிகப்பெரியது.

1960 களில் கல்முனை எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கி வழி நடாத்தியதன் மூலம் கல்முனைப் பிரதேசத்திலே எழுத்தாளர் பரம்பரையொன்றினை உருவாக்கினார். மருதூர்கொத்தன், மருதூர்க்கனி, அன்பு முகையதீன், மு.சடாட்சரன், பாலமுனை பாறூக், எம்.ஏ.நுஃமான் போன்ற பலர் இவரின் அரவணைப்பிலேயே உருவாகினார்கள். 1967 இல் "பாடுமீன்" என்னும் கலை இலக்கியத் திங்கள் இதழை வெளியிட்டார். ஆனால் இரண்டு இதழ்களே வெளிவந்தன.

கே.சி.நீலாவணன் எனும் புனைபெயரில் சுதந்திரன் பத்திரிகையில் எழுதிய "பிராயச்சித்தம்" எனும் சிறுகதையே இவரை இலக்கிய உலகிற்கு எழுத்தாளனாக அறிமுகப்படுத்திற்று. "பொய்மை பொசுங்கிற்று" என்பதே இவரது இறுதிக் கவிதையாகும். கே.சி.நீலாவணன் -நீலாவண்ணன்-நீலாவணன்- நீலா சின்னத்துரை-மானாபரணன்-இராமபாணம்-எழில் காந்தன்-சின்னான் கவிராயர்-எறிகுண்டு கவிராயர்-கொழுவு துறட்டி-அம் மாச்சி ஆறுமுகம்-வேதாந்தன்-சங்கு சக்கரன் என்னும் புனை பெயர்களில் எழுதியுள்ளார்.

மட்டக்களப்பில் வழங்கும் கிராமியச் சொற்களை நீலா வணன் தன் கவிதைகளில் நிறையக் கையாண்டுள்ளார். மட்டக் களப்பு மக்களின் வாழ்வியல் முறைகளை இவர் கவிதை வாயிலாக பதிவு செய்தளவுக்கு வேறெந்தக் கவிஞரும் இதுவரை செய்ய வில்லை.

11.01.1975 இல் நீலாவணன் இயற்கை எய்தினார். உயிர் வாழ்ந்த காலத்தில் சரியாக இனங்காணப்படாதவராகக் காணப் பட்ட கவிஞர், மரணத்தின் பின்னரே பேசப்பட்டார். 1976 இல் இவ ரது "வழி' என்னும் முதலாவது கவிதை நூல் வெளிவந்தது. இலங் கை சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றது. நீலாவணனின் இலக்கிய நண்பரான வ.அ. இராசரத்தினம் 1982 இல் "வேளா ண்மை" எனும் குறுங்காவியத்தை வெளியிட்டார். 2001 இல் 'ஒத் திகை" கவிதைத் தொகுதி வெளி வந்தது. 1966 இல் நீலா வணன் எழுதிய " உறவு" கவிதை க.பொ.த உயர்தர தமிழ்மொழிப் பாடத் திட்டத்திலே சேர்க்கப்பட்டுள்ளது.

| குப்பைத்தொட்டி | புத்துயிர் |
| --- | --- |
| அலுவலகத்தில் இருக்கிறவனுக்கு<br>இது குப்பைத்தொட்டி<br>குப்பை பொறுக்கி வாழ்கிறவனுக்கு<br>இது அலுவலகம் | 'போராளிகள் செத்துக் கொண்டிருக்கும்<br>மண் ' என்றார்கள் என் மண்ணை .<br>திருத்தினேன் - 'போராளிகள் பிறந்து<br>கொண்டிருக்கும் மண் ' |

- காசி ஆனந்தன் -

# வந்ததும் வராததும்

ச.முகுந்தன்



பத்திரிகை முகத்தில் பலி என்று
தார்ப்பூச்சு
அச்சறுக்கையாக அடைபட்ட வேலிகளில்
பச்சோந்திச் செதில்கள்
பாம்புகளின் கோவணங்கள்
விளக்குத் தலையோடும் குருட்டு விழியோடும்
வீதிகளில் அணிவகுத்த
தூக்கு மரங்களிலே தொடுத்த சணற்கயிற்றில்
நாக்குக் கிழிபட்ட தென்னங் குருத்துக்கள் , ஆம்
காரணம் தெரியாமல் காற்றூஞ்சல் ஆடுகின்ற
தோரணப் பிணங்கள் !

சில்வண்டும் ஷெல்துண்டும் சீழ்க்கை அடித்திருக்க
நள்ளிரவின் கற்பை நாய்கள் துகிலுரியும்

அன்றாடம் எங்கள் அலைமடியில்
அனுமதிகள் இன்றி வருவதனால்
இடுப்பொடிந்து மேற்றிசையில்
குருதித்திட்டாகி கதிர் குலையும்
பின்னடக்கும்
இரவு விசாரணையின் இம்சையினைத் தாங்காமல்
நிலவுமலங் கழிக்கும்
நெடில்கண்டு விண்ஈக்கள்
பலகூடி மொய்க்கும் பயங்கர ராத்திரிகள்.

இப்படியே எம்மை இருள் சப்பிய
பொழுதுகளை ஒப்பிப்பதென்றால்
ஒருபிறவி போதாது
எப்படியோ மீண்டுமொரு நல்லூர் கொடியேற்றம்
செப்படி வித்தையென்ற செல்லப்பர்
மொழி பொய்யாய்
இப்பொழுது ஆகாதா என்று எழும் ஏக்கம்
பொட்டல் வெளிகளிலே போட்ட
பனம் பாத்தித் திட்டுகளில் நாளை
அமைதி மழைத் தூவானம்
தட்டுமென்று காற்றோ குடுகுடுப்பைக்காரன்போல்
விட்டு விட்டுப் பேசுகுது
என்றாலும் வியர்க்கிறது

# வாசு - சற்றே கவனிப்பிற்குரிய மொழிமாற்றுப்படம்

-இராகவன்-



தென்னிந்திய சினிமாவில் அவ்வப் போது சற்றே வித்தியாசமான வரவுகள் இடம் பெறத்தான் செய்கின்றன. அந்தவகையில் அண்மையில் வந்திருக்கும் வாசு எனும் மொழிமாற்றுத் திரைப்படம் (மலையாளம்) சற்றே கவனிப்புக்குரியதாகும். வெறிநாய்களால் அவதிப்படுகிறது கிராமம். பஞ்சாயத்து தலைவரின் ஏற்பாட்டில் வெறிநாய்களைப் பிடிப்பதைத் தொழிலாகக் கொண்ட வாசு கிராமத்துக்கு வருகிறான். அவன் வெறிநாய்களைப் பிடிப்பதில் வெற்றியடைந்தானா ? என்பது தான் திரைப் படத்தின்கதை.

அவன் வெறிநாய்களைப் பிடிப்பதற்காக ஒரு வீட்டில் தங்கியிருக்க நேர்கிறது. அந்தவீட்டில் ஒரு வயதான தாயும், வேலைக்குப் போகும் மகளும், மனநிலைகுழம்பிய மகனும் உள்ளனர். முதலில் வாசு அந்த வீட்டில் தங்கியிருப்பதை மகள் விரும்பாதவளாக இருக்கிறாள். மனநிலை குழம்பிய தனது அண்ணனைப்பற்றிய தகவல்களை மறைக்கிறாள். சிறுவயதிலேயே தாயை இழந்த வாசுவுக்குஅந்த வீட்டிலுள்ள வயதான தாயின் மீது பாசம் எழுவதாகவும், இது இறுகிச்செல்வதாகவும் மெல்லிய இழையினூடாக கதை நகர்கிறது. மனநிலை குழம்பியஅந்த வீட்டு இளைஞனைப் பற்றி வாசுவுக்குத் தெரிய வரும்போது வைத்தியரை அழைத்து வருவதிலிருந்து சகலவிதங்களிலும் அந்தக்குடும்பத்திற்கு உதவியாக இருக்கிறான் வாசு. வேலைக்குப் போகும் மகளுக்கும் வாசுவுக்குமிடையில் மென்மையான காதலும் வளர்கிறது. இந்நிலையில் அந்தக் குடும்பத்தின் விரோதி சிறையிலிருந்து வருகிறான். அவன் அந்தக் குடும்பத்தலைவனை தகராறொன்றில் கொலை செய்கிறான். தனது கண்முன்னால் தந்தை கொல்லப்படுவதை காணும் மகனுக்கோ மனநிலை குழம்பிவிடுகிறது. தந்தையைக் கொல்வதை நேரில் பார்த்த இன்னொருத்தியான மகள் "பொள்ளாச்சி மாணிக்கம் என்ற இந்தவிரோதி தான் என் தந்தையைக் கொன்றவன்" எனச் சாட்சி சொல்ல

அவன் சிறைக்குப் போகிறான்.

சிறையிலிருந்து திரும்பி வரும் பொள்ளாச்சி மாணிக்கம் அந்தக் குடும்பத்திற்கு பலவழிகளிலும் அச்சுறுத்தலாகவேயிருக்கிறான். இதனால் வாசுவுக்கும் அவனுக்கும் இடையில் விரோதம் வளர்கிறது. மாணிக்கத்தின் அசைவுகளால் மனக்குழப்பத்திற்குள்ளாகி இருக்கும் சேகர் ஆவேசமடைந்து கத்துகிறான். சங்கிலிகளால் பிணைத்து அறையிலடைத்து வைத்திருக்கும் சேகரை வாசு வெளியில் சாதாரணமாக உலவச்செய்து மனக்குழப்பத்தை தெளிவிக்க முயல்கிறான்.

வெறிநாய்களை வாசு சரிவரப்பிடிக்காமலிருப்பதால் அவை திரும்பவும் ஒரு சிறுவனைக் கடித்து விடுகின்றன. இதிலிருந்து பஞ்சாயத்து தலைவருக்கு நெருக்கடிகள் அதிகரிக்க பதவி மோகங் கொண்ட தலைவர் தவிர்க்க முடியாமல் பதவி விலக வாசுவுக்கு இருப் பிடத்தை ஒழுங்கு செய்து கொடுத்தவர் பஞ்சாயத்தின் புதிய தலைவர் ஆகிறார். இருபத்து நான்கு மணிநேரத்திற்குள் வெறிநாய்கள் முழுவதையும் பிடித்து விடுவதாக மக்களுக்கு வாக்குறுதியும் அளித்துவிட்டு வாசுவிடம் வருகிறார். பஞ்சாயத்தின் தலைவராகும் நோக்கில் நாய்கள் பிடிப்பதை தாமதப் படுத்தும் படி முன்னர் வாசுவுக்குச் சொல்லி வைத்திருந்தவரும் அவர் தான்.

பஞ்சாயத்துத்தலைவரின்வேண்டுகோளுக்கிணங்க துப்பாக்கியோடு நடு இரவில் வெறிநாய்களை வேட்டையாடச் செல்கிறான் வாசு. அதே நேரம் பொள்ளாச்சி மாணிக்கத்தை பழிவாங்கும் வெறியோடு சேகரும் வீட்டை விட்டு வெளியே செல்கிறான். அவன் வெறிநாய்கள் பதுங்கியிருக்கும் காட்டினுள்ளே மாணிக்கத்தை சந்திக்க நேர்கையில் இருவரும் மோதிக்கொள்கின்றனர். மோதலால் ஏற்படும் சலசலப்பில் வெறிநாய்கள் வருவதாக எண்ணி வாசு சுடுகிறான். இதனால் சேகர் குண்டடி பட்டு இறக்க நேரிடுகிறது. வாசு சேகரைக் கொன்றுவிட்டதாக கத்திக்கொண்டு கிராமத்துக்கு ஓடுகிறான். இந்நிலையில் வெறிநாய்கள் பாய்ந்து வந்து வாசுவைக் கடிக்கின்றன. வெறிநாய்க்கடிக்குள்ளாகி சேகரின் பிணத்தை சுமந்தபடி வீட்டுக்கு வரும் வாசுவை பஞ்சாயத்துத் தலைவர் பாதுகாப்பான இடத்தில் ஒழித்து வைக்கிறார். தனிமையில் இருக்கும் வாசுவை வெறிநாய்கள் கடிக்கப் பாய்ந்து வருவதாக

பெரும் பிரமையேற்பட்டு அதிலிருந்து விடுபடமுடியாமல் நடத் தையால் வாசு வெறிநாயாகவே மாறி வெளியே வருகிறான். அவ னைக் கல்லெறிந்து தாக்குகின்றனர் மக்கள் . மாணிக்கம் வாசு வைப் பழி தீர்க்கும் வேகத்தில் வந்து தாக்குகிறான். ஈற்றில் வாசுவால் கடிபட்டு இறக்கிறான். வாசு தான் தங்கியிருந்த வீட்டிற்கு தவழ்ந்து வருகையில் அவன் பாசத்திற்குரியவளான தாயான வீட்டுக்காரியால் சுடப்பட்டு இறக்கிறான். அவனைப் பிடித்துச் செல்ல வந்திருப்பவர்களின் சித்திர வதைகளுக்கு ஆளாகாமல் அவன் இறப்பதே மேலானதென அத்தாய் கருதியதாலேயே அம்முடிவை அவள்எடுக்கவேண்டி ஏற்படு கிறது.

மூன்றாந்தரச் சினிமாக்களில் நாயகனை அறிமுகப்படுத்துவது போலவே இங்கே வாசு அறிமுகப்படுத்தப்படுகிறான். குறைவில்லாத குலுக்கல் நடனப்பாடலுடன் அவனது அறிமுகம் துவங்குகிறது. மொட் டையான தோற்றத்துடன் பயமுறுத்திக்கொண்டே வருகிறான் - "உடும்பு வாசு". நாய் பிடிப்பவன் மொட்டையனாக இருப்பான் போலும் என எண்ணத் தோன்றுகிறது.

மேலும் வசனங்கள் செறிந்த கோமாளித்தனமான பஞ்சாயத்துத் தலைவர்களின் கேலிக் கூத்துக்களும், உடும்பு வாசுவும் அரசாங்க அதிகாரியும் சந்திக்கும் காட்சிபோன்ற தேவையற்ற காட்சித் திணிப்பு களும் படத்தை வீக்கமடையச்செய்து தரந்தாழ்த்தி விடுகின்றன. இத னால் உயிர்த்துடிப்புடன் சீரியஸாக நகரவேண்டிய படம் நத்தை வேகங் கொள்கிறது.

வாசுவாக வரும் கலாபவன் மணியின் வெறிநாய் போன்ற தத் ரூபமான பாவனையும் நடிப்பும் குறிப்பிடக்கூடியதும் முக்கியமானது மாகும். வீட்டுக்கார இளம் பெண்ணாக வந்து வாசுவுடன் மெல்லிய காதல் இழையில் சிக்கும் சிந்துவின் முகமும் நினைவில் நிற்கிறது. பொள்ளாச்சி மாணிக்கம் வில்லத்தனமான முகத்துடன் வருவதோடு எல்லாம் முடிந்து விடுகிறது. இப்படத்தை நெறியாள்கை செய்திருக்கும் கே. வினு மேற்கூறிய விடயங்களில் கவனம்செலுத்தியிருந்தால், அல்லது இவ்விடயங்களை தவிர்த்துவிட்டு வாசுவை எடுத்திருந்தால் படம் இறுக்க மாகவும் உயிர்த்துடிப்புடன் சீரியஸாகவும் இருந்திருக்கும் என்பது டன் விமர்சகர்களின் கவனத்தைத் தன்பக்கம் ஈர்த்திருக்கும்.

# பாம்புகள்

-நரகத்து முள்-

பாம்புகள்
புதர்களிலும், புற்றுக்களிலும் பதுங்கிச் சீறிப்படமெடுத்து
எம்மைப் பயமுறுத்தி
எதிர்த்த பாலகர்க்கு 'முத்தி" தந்த பாம்புகள்.......
இன்றெம் ஊர்மனையில்,
படமொடுக்கி, விசப்பல்மறைத்து, சீறல் சினம் களைந்து
சிநேகமாய் ஊர்கின்றன.
"பாம்பென்றால்
தடி எடுத்து-தற்பாதுகாப்போடு-எட்டிநின்று-இடம்பார்த்து
அடிப்போம்- எரியூட்டிப் புதைப்போம்"
என்றுரைத்தோர் :
"நல்ல பாம்பு"மங்கல வழக்குரைத்து மகிழ்கிறார்.
பால் வார்த்து, பக்தியுடன் பூசித்து, பரமசிவன் கழுத்தும்
பரிசளித்தார்.

வீதிகளில்,குச்சொழுங்கை, மதில்கூரை, மரநிழலில், ஆளில்லா
வீட்டில், அன்றாட பயணத்தில், ஆலயத்தில்
முற்றத்தில் கல்லூரி வளவுகளில்.
பார்க்கும் இடமெங்கும் பாம்புகள்.

"கொம்பேறி மூக்கன் கொத்தும். மயானத்தில் சிதை எரியும் வரை
தொடர்ந்து சினம் தீர்க்கும் "
பாட்டி சொன்ன பழையகதை பொய்யா புரியவில்லை !
எம் வீட்டு முற்றத்தில்
நட்போடு பழகும் நாகங்கள் தானா உயிர்குடிக்கும்
எது உண்மை ?
நேற்றெம் மரமேறி...... கிளை சென்று
கட்டி வைத்த கூட்டை சிதைத்து, முட்டை குடித்த

மூர்க்கம் மறைந்த தெங்கே?
குளத்தில் விசம் கலக்கி
மான், பறவை, மாடுகளின் உயிர் குடித்த
காளியன் தலைமீது கால் பதித்த
'கண்ணன்' எவன் ?

ஊரடங்கியபின் உலவச்சென்றால்
உயிர்குடிக்கிறது. உணர்வோம் (!)
சர்ப்பத்தின் சாத்வீகம் பொய்வேடம்
எதுவரைக்கும் இது பதுங்கும்....?
எம்வீட்டின்
கம்புகள், சிறுதடிகள், விளக்குமாறு,
குசினிப்பாத்திரங்கள், கோடரி, கத்தி என
அனைத்துப் பொருட்களிலும் ஆதிக்கம் பதித்த பின்னர்
அவை சீறும்.... எமை எதிர்க்கும்
கொடிய விசம் கொண்டு கொத்தும்.
அன்றடிக்க கருவியின்றி நாமழிந்தால்
மயானம் வரை வந்து ....... எரிசிதை கண்டின்பமுறும்.
ஊர் உருக்குலையும். புற்றாய் உருமாறும்.
அனைத்தும் தவறென்று ஒப்புக்கு கருடன்
அறிக்கை விட
"பரமசிவன் கழுத்து" பதிலுரைக்கும்.

ஒப்பாரி ஓசை.... ஊரை உலுக்கிறது.
தந்தை கடன் தீர்க்க, தாயின் குறை முடிக்க
வனம்சென்ற "லோகிதாசன்" கடியுண்டான்.
அன்னையின் அலறல்....மயானத்தில்.

தம்பி!
கம்பு, சிறுதடி கைக்கொள்.
விளக்குமாறு, தும்புத்தடி வேளைக்கு எடு.
நாளை எம்மூர் புற்றாய் மாறுமுன்
நாம் தடுப்போம்.

# சிறப்பு விருந்தினர் சிம்மாசனம்

ஆசனத்தை அழகுபடுத்துபவர்
**மஹாகவி. து.ருத்திரமூர்த்தி**

ஈழமணித் திருநாட்டில் அளவெட்டி என்னும் ஊரில் 09.01.1927 இல் பிறந்தவர் து.ருத்திரமூர்த்தி. கல்லூரி மாணவனாய் இருக்கும் காலத்திலேயே தமிழ்மீதும், கவிதைமீதும் தீராக் காதல் கொண்டார். யாழ் மறுமலர்ச்சிச் சங்கத்திலே இளம் உறுப்பினராய் இணைந்து, நாவற் குழியூர் நடராசன், அ.செ.முருகானந்தம், அ.ந.கந்தசாமி, வரதர் முதலி யோரின் செம்மையான தூண்டலினால் "ஈழகேசரி", "மறுமலர்ச்சி" என் பவற்றில் கால்பதித்து கவிதைக் களத்திலே உலாவந்தவர். கவிதைத் துறையிலே வளமானதொரு பாதை வகுத்த சாதனையாளர். மஹாகவி பண்டிதன், புதுக் கம்பன், புதுநாப்புலவர், மாபாடி, மகாலக்ஷ்மி முதலிய புனை பெயர்களில் எழுதியுள்ளார். எனினும் மஹாகவி என்றே இன்று அவரை இலக்கிய உலகு அழைத்து நிற்கிறது.

கவிதை, காவியம், பாநாடகம் முதலிய துறைகளில் வெற்றி கரமான பல பரிசோதனைகளைச் செய்துள்ளார். சடங்கு, கந்தப்ப சபதம், கண்மணியாள் காதை, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம் என்பன காவிய வகையின. புதியதொரு வீடு, கோடை, முற்றிற்று என்பன பாநாடகங்கள் சேனாதிபதி, பொய்மை, கோலம், திருவிழா, அடிக்கரும்பு முதலான செய்யுள் நாடகங்கள் இவரால் வானொலிக்கு எழுதப்பட்டன. மஹாகவி அறிமுகப்படுத்திய "குறும்பா" என்ற பாட்டு வடிவம் ஈழத்து கவிதை வளர்ச்சியில் ஒரு திருப்பு மையம் என்றே கூற வேண்டும். "குறும் பா" என்பது குறுகிய பாட்டு என்றும் குறும்பு விளைவிக்கும் பாட்டு என்றும் பொருள்படும். "குறும்பா'வின் பிதாமகன் யார்? என்பது பற்றி இலக்கிய உலகிலே பல வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்துள்ளன. மேலைத்தேச வடிவமெனவும், பாரதிதாசன் பயன்படுத்திய யாப்பியல் வடிவமொன்றின் நெகிழ்ச்சியான தன்மையுடையது என்றும் பல முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

" கொழும்பிலே காணி வயல்கேணி
சொந்தத்தில் கார் சோக்கான வீடு

இத்தனையும் கொண்டுவரின்
இக்கணமே வாணியின்பால்
சிந்தை இழப்பான் தண்டபாணி ”

என்றவாறாக சமூகத்திலே புரையோடிப் போன சீதனப் பிரச்சனையை கிண்டலும் கேலியுமாக எடுத்துரைக்கின்றார்.

“ முத்துக் குளிக்க மூழ்கினான் சீலன்
முன்னாலே வந்து நின்றான் காலன்
சத்தமின்றி வந்தவனின்
கைத்தலத்தில் பத்து முத்தை
பொத்தி வைக்கப்போனான் முச்சூலன் ” எனும் குறும்பா கையூட்டை (இலஞ்சம்) எள்ளி நகையாடுகிறது.

இவர் ஆரம்பகாலத்தில் சில சிறுகதைகளும் எழுதியுள்ளார். வேதாந்தம், பிரமசாரி . பரமசிவம், ஈகை, நஞ்சு, உலகம். கோணலானது, தூக்கணாங் குருவிக்கூடு போன்றன அவற்றுட் சில. இவர் கவிதைவடிவத்தில் ஒரு முழுமையைப் பேணி வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. உள்ளடக்கத்தின் பொருளோடு தொனிப்பொருள் ஒன்றும் தோன்றி வளர்ந்து நிறைவு பெறும் தன்மையும், உருவத்திலும் சிறுகதை போன்ற ஒரு நிறைவுத் தன்மையும் காணமுடியும். குறியீட்டு முறையில் அல்லது முற்றுருவப்பாங்கில் குறிப்பாக பொருளை புலப்படுத்தும் நெறியில்பெரும் வெற்றி கண்டவர்.

“ சிறுநண்டு மணல் மீது படமொன்று கீறும் ; சில வேளை அதை வந்து கடல் கொண்டு போகும் ”என்பது ஒரு சின்ன உதாரணம் இவர் மரபிலே ஊறித்திளைத்தவர். ஆனாலும் மரபும் புதுமையும் அவரிடம் சங்கமித்திருந்தன.

“தற்கால வாழ்க்கைப் புலத்தை களமாகக் கொண்டு நடைமுறை வாழ்க்கையை யதார்த்த பூர்வமாக சித்திரிக்கும் முறையை தமிழ்க்கவிதையில் கொண்டு வந்தமை மஹாகவியின் முக்கிய பங்களிப்பாகும். ” என்று எம். எ. நுஃமான் குறிப்பிடுகின்றார். சாலை இளந்திரயன் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த உலக தமிழாராய்ச்சி மகாநாட்டில் இவரைப் பற்றி ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

1971. 06. 20 இல் இருதய நோயினால் இறையடி சேர்ந்தார்.

# துரோணர் பதில்கள்

அபூர்வன் கரணவாய்

* மு.மேத்தா, வைரமுத்து போன்றளவுக்கு எழுதக்கூடிய கவிஞர்கள் ஈழத்திலே இருக்கிறார்களா...? சீ...சீ! அந்தளவுக்கு எழுதக்கூடிய கவிஞர்கள் இங்கும் மிகக் குறைவு. எங்கள் நாட்டுக் கவிஞர்கள் மிகவும் நன்றாகவே எழுதுகிறார்கள்.

கவிராஜ் உடுப்பிட்டி

* ஆங்கில மொழியில் கணிதம், விஞ்ஞானம் முதலான பாடங்களைப் போதிப்பது பற்றிய தங்கள் கருத்து யாது ?

கணித ,விஞ்ஞான பாடங்களை தாய்மொழியில் கற்பித்தபோதே எத்தனையோ இடர்களை அனுபவித்துள்ளோம். ஆங்கில மொழிமூலம் கற்பித்து மொழியை முன்னேற்றலாமே தவிர, அப்பாடங்களை மாணவரிடத்தே முழுமையாகக் கொண்டு சேர்க்கமுடியாது. அது சரி. ஆங்கில மொழிக்கல்வியை முன்னேற்ற இதைவிட வேறு வழியா இல்லை?

ஜனாதிபதி, பிரதமர் உட்பட அனைத்து அரசியல் பிரமுகர்களும் சிங்களத்திலே கையொப்பமிட தமிழ்அரசியல்வாதிகளோ ஆங்கிலத்திலே கிறுக்குகிறார்கள். இத்தகைய சூழலில் தாய்மொழிக் கல்வியின் அவசியம் பற்றிப்போசாமல் அந்நிய மொழிக்குச் சாமரம் வீசுவது ஆரோக்கியமானதல்ல.

பாலகுமார் கரவெட்டி

* இளைய ராஜாவுக்காகவே பல திரைப்படங்கள் ஓடியதாக சென்ற இதழில் எழுதியுள்ளீர்கள். ஏன் ? A.R. ரகுமானுக்காகப் படங்கள் ஓடுவதில்லையா ..?

நட்சத்திர நடிகர், புகழ் பூத்த இயக்குனர். அதிக பணம் செலவிடும் தயாரிப்பாளர் போன்றோரின் படங்களுக்கே A.R.ரகுமான் இசையமைக்கிறார். இச்சூத்திரங்களைத் தாண்டிய படங்கள் தேர்ந்தெடுத்த அருமையான கதையினைக் கொண்டிருக்கின்றன. ஆனால் ராமராஜனின் 'மாட்டுப் படங்களை' க் கூட இளையராஜா வெற்றி பெற வைத்திருக்கிறார்.

MR.பொதுசனம் நாற்சந்தி

* கணை-4 இன் அட்டைப்படம்உங்களை யார் என்று அடையாளம் காட்டுவது போல் உள்ளதே...?

தவறாக ஊகித்துள்ளீர்கள். நாங்கள் நடுநிலைவாதிகள். அரசியல் சார்ந்தவர்கள் அல்லர். ஆனால் இனத்தின், மொழியின்,

சமூகத்தின் விடுதலையில் அக்கறை உள்ளவர்கள்.

அச்சுவேலி

அநாமிகா

* துரோணரே....! நல்ல தமிழ்த் திரைப்படங்கள் என நீங்கள் எவற்றை அடையாளம் காட்டுவீர்கள்

அழியாத கோலங்கள், மெட்டி, வீடு, உதிரிப்பூக்கள், குட்டி

நல்லூர்.

உ.இந்துஜா

* குட்டிக்கதை ஒன்றுசொல்லுங்கள் ! ப்ளீஸ் !

கடிதங்களைத் தரம் பிரிக்கும் ஊழியர் ஒருவர்,விசித்திரமாக விலாசமிடப்பட்ட கடிதம் ஒன்றினை தபாலதிபரிடம் கொண்டுவந்து கொடுத்தார். அக்கடிதத்தில்

சேரல்
சி.முருகன்
மே.பா.பிள்ளையார்,
தேவேந்திரன் வீதி,
திருக்கைலாய மலை.

என்று விலாசமிடப்பட்டிருந்தது. ஆர்வத்துடன் கடிதத்தினைப் பிரித்து தபாலதிபர் படித்தார். மிகவும் வறுமையில் வாடுகின்ற முதியவளொருத்தி தன் கஷ்டங்களை எல்லாம் முருகனுக்கு எழுதியிருந்தாள். தன் துன்பத்தினைப் போக்க ரூபா 1000/= உடனடியாக அனுப்பி வைக்கும்படியும் எழுதியிருந்தார்.

கடிதத்தினை படித்த தபாலதிபர் கண்கலங்கினார். அங்கிருந்த அனைத்து ஊழியர்களையும் உடனழைத்து கிழவியின் கஷ்டத்தினைத் தெரியப்படுத்தி ஊழியர்களிடமிருந்து பணம்திரட்டி ரூபா 800/= அனுப்பி வைத்தார். இரண்டு வாரங்களுக்கு பின்னர் அதேபோல விலாசமிடப்பட்டதொரு கடிதம் வந்தது. தபாலதிபர் பிரித்துப் படித்தார்.

அன்புள்ள ஆண்டவனுக்கு,

உன்னருளால் நலமாகவே இருக்கிறேன். என் துன்பத்தினை உணர்ந்து பணம் அனுப்பியதற்கு நன்றி ! ஒரு துன்பகரமான செய்தியினையும் உனக்குத் தெரிவிக்கவேண்டும். நீ அனுப்பிய 1000/= ரூபாவில் 200/= ரூபாவை தபாலகத்தினைச் சேர்ந்தவர்கள் திருடிவிட்டார்கள். ஆனாலும் அவர்களை மன்னிப்பாயாக.....

இப்படிக்கு
செல்லாச்சி

# சக்திப்பிரச்சினையில் சூரிய சக்தியின் பங்களிப்பு

குகதாசன் - திருமாறன்
தரம் :- 11 A
யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
வல்வெட்டித்துறை.

தற்போது உலகின் கவனத்தை ஈர்த்துவரும் பிரச்சனைகளில் முக்கியமானது பெற்றோலியத்தின் விலையுயர்வும் அதன் நிலையற்ற தன்மையுமாகும். இன்னும் எத்தனை வருடங்களுக்கு நமக்கு பெற்றோலியம் கிடைக்கும் என்ற கேள்வி ஒரு புறம் இருக்க பெற்றோலியத்தின் சடுதியான விலை உயர்வுகள் மறுபுறம் வாட்டுகின்றன. மூன்றாம் உலக நாடுகளன்றிக் கைத்தொழில் நாடுகளும், ஏன்? வல்லரசுகளும் இப்பிரச்சினைகளால் பாதிப்புற்றுள்ளன. எனவே, கிட்டத்தட்ட எல்லா நாடுகளும் பெற்றோலியத்திற்கு பதிலாக உபயோகிக்க கூடிய சக்தி முதல்களை ஆராய்ந்து வருகின்றன.

இவை ஆராய்ந்து வரும் பல்வகையான மாற்றீட்டு சக்திகளில் முதலிடம் வகிப்பது சூரிய சக்தியே. சூரியசக்தியின் முக்கியத்துவத்திற்கு பல காரணங்கள் உண்டு. முதலாவதாக சூரிய சக்தி உலகில் சுமார் 75 வீதமான நாடுகளில் பெறப்படுகின்றது. இதனால் சகல நாடுகளும் தாமே தமது சக்தி தேவையை பூர்த்தி செய்யக்கூடியதாக காணப்படும். இரண்டாவதாக இச்சக்தியை உபயோகிப்பதனால் சூழல்மாசுபடமாட்டாது. பெற்றோலியத்தை பயன்படுத்துவதன் மூலம் சூழல் அதிகளவு மாசடைகின்றது. அடுத்ததாக, சூரியசக்தி மிகமலிவானதொன்றாகும். ஏனெனில் எவ்வித செலவுமின்றி நாம் அதனை நேரடியாக சக்தி வடிவில் பெறக்கூடியதாக உள்ளது. ஆனால், அச்சக்தியை பெற்று பயன்படுத்துவதில் இன்னும் சரியான திருத்திய உபகரணங்கள் கண்டறியப்படவில்லை.

மேற்கூறிய பல காரணங்களினால் சக்திபிரச்சினைக்கு ஒரே தீர்வு சூரியசக்தியே என்று அனேக நாடுகள் உணர்ந்துள்ளன. மேலும் பலநாடுகள் சூரியசக்தியை பயன்படுத்திப் பல ஆக்க பூர்வமான செயல்களில் ஈடுபடவும் ஆரம்பித்துள்ளன. சோவியத் ரஷ்யாவில்

முழுக்க முழுக்க சூரிய சக்தியே கொண்டியங்கும் மாபெரும் நீரிறைக்கும் இயந்திரம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இது சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்புக்கு நீர்பாய்ச்சக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளது. ரஷ்யாவின் சில பகுதிகளில் உள்ள வீடுகள் சூரியசக்தியினால் உஷ்ணப் படுத்தப்படுகின்றன. மேலும் சூரிய வெப்பத்தை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் நிலையங்கள் பல ரஷ்யாவில் அமைக்கப்பட்டுள்ளன.

மற்றுமொரு பெரிய நாடான சீனாவும் சூரியசக்தியின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளது. சீனாவில் நூற்றுக்கணக்கான வீடுகள் முழுக்க சூரியசக்தியிலே இயங்குகின்றன. இஸ்ரேலில் கடல்நீரை நன்னீராக்கும் முயற்சியில் சூரியவெப்பம் பயன்படுத்தப்படுகின்றது. அவுஸ்திரேல்யாவின் சில நகரங்களுக்கிடையான தொலைபேசி சேவைகள் இயங்குகின்றன. அவுஸ்ரேலியாவிலுள்ள தொலைபேசி சேவைகள் அனைத்தும் விரைவில் சூரியசக்தியுடனே இயங்க ஆரம்பித்து விடும் இவ்வாறு உலகின் பல நாடுகளிலும் சூரியசக்தி முக்கியத்துவம் பெறுகின்றது.

எமது நாடான இலங்கையும் சூரியசக்தியை பயன்படுத்துவதில் பின்நிற்கவில்லை இலங்கைமின்சாரசபை சூரியசக்தியின் அடிப்படையில் இயங்கும் பல உபகரணங்களை செய்து பரீட்சார்த்தநிலையில் வைத்துள்ளது. இவ்வுபகரணங்கள் பொது மக்கள் பாவனைக்கு வருமாயின் மின்சார நுகர்வு குறைந்து மின்சார தட்டுப்பாடு ஓரளவு நீங்கலாம் என கருதப்படுகின்றது. மேலும் பல நிறுவனங்கள் சூரியசக்தியை இலங்கையில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றித் தீவிர ஆராய்ச்சிகள் செய்து வருகின்றன.

எனவே மொத்தத்தில் சூரியசக்தியின் முக்கியத்துவம் உலகெங்கும் உணரப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் பெற்றோலிய எரிபொருள் சிக்கலுக்கு சுமுகமான முறையில் சிறந்ததீர்வு கதிரவனின் கதிர்கள் மூலம் எமக்கு கிடைத்துள்ளன. 21ம் நூற்றாண்டில் எமது நாளாந்த தேவைகள் மட்டுமன்றிக் கைத்தொழிற் தேவைகளையும் பூர்த்தி செய்யும் ஒரே சக்தி முதலாக சூரியன் விளங்குவான் என்பதில் சந்தேகமில்லை.

நன்றி

# சீனாவின் பெரும்மதில் சுவர்

த.தயானந்
ஆண்டு 11A
உடுப்பிட்டி அ.மி.க.

விண்வெளி வீரர்கள் ஆகாயத்தில் போய் அங்கிருந்து பூமியை பார்க்கும் போதும் அவர்களது பார்வையிலிருந்து கடைசியாக மறைவது சீனாவின் பெரும் மதில் சுவராகத்தான் இருக்கும். உலகிலேயே மேற் கொண்ட மிகப்பெரிய கட்டட வேலை இதுதான் இதன்நீளம் 1500 மைல் கள் அதாவது பூமியின் சுற்றளவில் இருபதில் ஒரு பங்கு. இச்சுவரில் 24,000 நுழைவாசல்களும் கோபுரங்களும் உள்ளன. இதன் சராசரி உயரம் 25 அடிகள். அதன் அடிப்பகுதி 20 லிருந்து 30 அடிஅகலமானது. மதில் சுவரின் உயரத்தில் 15 அடி அகலம் இருக்கும் ஒரேசமயம் பல குதிரை வீரர்கள் அம்மதில் சுவரின் மேல் பகுதியை அடைத்து கொண்டு சவாரி செய்யலாம். கி.மு 3ம் நூற்றாண்டில் இதனைக் கட்ட ஷின் ஹவாங் டி ஆரம்பித்தார் பிறகு மற்றவர்கள் இதனைத் தொடர்ந்து கட்டி 1700 ஆண்டுகளுக்குப் பின் பூர்த்திசெய்து முடித்தார்கள். கடைசியாகக் கட்டி முடித்தது ( 1365-1644 ல்) ஆண்ட மிங் அரசகுடும்பமே.

# நகைச் சுவை விருந்து

ஜெ.யசோ
யா/கம்பர்மலை அ.த.க.பா

* * *

ராம் :- மாப்பிள்ளை என்ன பண்றார் ?
ரகு :- பொலிஸ்ல இருக்கார்
ராம் :- பலே! பலே! என்னவா இருக்கார் ?
ரகு :- கைதியா இருக்கார்.

* * *

நோயாளி :- டாக்டர்! எனக்கு உடம்பெல்லாம் அரிக்குது
டாக்டர் :- இப்படி உக்காருங்க. ஊசி போடறேன் இந்த மாத்திரையை மூன்று நாளைக்குச் சாப்பிடவும்.
நோயாளி :- இதெல்லாம் செஞ்சா. அரிப்புப் போயிமோ டாக்டர் ?

டாக்டர் :- அரிப்புப் போகாது. நகம் நல்லா வளரும். சொறிய வசதியாக இருக்கும்.

* * *

ராஜா :- டேய் ரவி ஏனடா அந்த ஆளுக்கு அடிச்சனி?

ரவி :- நான் எங்கேயும் போகும்போது என்னையாரும் எங்கே போறீங்கள் என்று கேட்டால் எனக்குக் கெட்டகோபம் வரும்.

ராஜா :- அதுக்காக பஸ்கண்டக்டர்க்கு அடிக்கிறதா ?

* * *

சிண்டு :- எது அடிச்சா சிரிப்போம் ?

மண்டு :- ஜோக் அடிச்சா....

* * *

# பொது அறிவு

1. முதன்முதலில் ஒலிம்பிக்போட்டிக்கு தலைமை தாங்கிய இலங்கைப் பெண் யார் ? புஸ்பமாலிராமனாயக்க
2. CIH என்று அழைக்கப்படும் கணனி வைரசினை பரவ விட்ட நபர் யார் ? சென்
3. கண் பார்வையற்றவர்கள் கல்வி கற்பதற்கான முறையினைக் கண்டுபிடித்தவர் யார் ? லூயி பிரேய்லி
4. உலகில் மிகப்பெரிய கடிகாரம் எங்கு அமைந்துள்ளது ? இங்கிலாந்து
5. உலகில் அதிகளவுமுட்டையிடும் பிராணி எது ? கறையான்
6. BOAC விமானசேவை எந்த நாட்டிற்குச் சொந்தமானது ? நிக்கோடின்
7. அணுவைப் பிளக்க உதவும் கருவியின் பெயர் என்ன ? சைக்னோட்ரான்
8. மனித உயிரினத்தை கொலை செய்யும் சிலந்தி காணப்படும் நாடு எது ? அமெரிக்கா

9. அமெரிக்காவிலுள்ள நாஸா நிறுவனத்தின் விண்வெளி ஆய்வாளர் யார் ? கலாநிதி கார்வின்

10. உலகின் புகழ் பெற்ற நீர்வீழ்ச்சி எது ? நயாகரா நீர்வீழ்ச்சி

**ம.தர்ஜியா**
2005 கலைப்பிரிவு
யா/ விக்னேஸ்வராக் கல்லூரி
கரவெட்டி.

# சமாதானப்புறா ஒன்று கண்டேன்.

நீல வான முகில்கள் இடையில்
வெள்ளை நிறத்தில்
சமாதானப் புறாவொன்று கண்டேன்
நீங்காத கவலை முடிந்தது என்றேன்.

ஓயாத அலைகள்இன்று
ஓய்ந்து இருப்பதும் ஏனோ...?
காலை-மாலை குதூகலத்தில்
கழிகிறது.

முழங்கிய வெடிமுழக்கம்
ஓடிய இரத்தஆறு
நீங்கி வரப்போகிறது மகிழ்ச்சி ஆறு

அரசியல் கவிழ்ந்தது
அழிந்தது மக்களின் உடமைகள் தான்
ஒளிவீசும் நிலவு போல்
அழகாய்ப் பறக்கும் வெண்புறாவே
நிலைத்திரு நீங்காது எம்மோடு

**வி.கார்த்திக்**
தரம் 8
யா/நெ.ம.ம.வித்தியாலயம்

# தேடல்போட்டி இல 05

1) தமிழ்ச் சிறுகதைகளின் மன்னன் எனப் போற்றப்படுபவர்
1) புதுமைப்பித்தன் 2) பாரதி 3) கல்கி

2) உலகின் முதற்சோதனைக் குழாய்க் குழந்தை
1) தோமஸ் செவியர் 2) லூயிஸ் பிரௌண்
3) மைக்கேல் ராவிட்

3) "தக்கன பிழைக்கும் தகாதன மடியும்" எனும் இயற்கைத் தேர்வு (கூர்ப்பு) கொள்கையினை முன் வைத்தவர்
1) மென்டலீவ் 2) லாமார்க் 3) சார்ள்ஸ் டார்வின்

4) "அக்கினிச் சிறகுகள்" எனும் சுயசரிதத்தினை எழுதியவர்யார்? தமிழரான இவர் விஞ்ஞானியாகவும், ஜனாதிபதியாகவும் காணப்படுகின்றார்.
1) மு.கருணாநிதி 2) அப்துல்கலாம் 3) கந்தையா

5) டேவிட் வட்மோர் எந்நாட்டு துடுப்பாட்ட அணியின் பயிற்சியாளர்
1) இலங்கை 2) இந்தியா 3) தென்ஆபிரிக்கா

6) இந்திய அமைதிப்படை நம்நாட்டில் வந்திறங்கிய தினம்
1) 1987-01-14 2) 1987-07-29 3) 1987-05-01

7) ஈழ விடுதலைப் போரில் வீரமரணமடைந்த போராளிகளின் சராசரித்தொகை
1) 17000 2) 15000 3) 19000

8) 'உதிரிப்பூக்கள்' திரைப்படத்தின் இயக்குனர் 'உதிராத பூக்கள்' எனும் படத்தினை இயக்கிக் கொண்டிருக்கின்றார். அவர் யார்?
1) பாலுமகேந்திரா 2) மகேந்திரன் 3) மணிரத்தினம்

9) பாடல்களே இல்லாத முதல் தமிழ்த் திரைப்படம்
1) அந்தநாள் 2) ஏர்ப்போர்ட் 3) குருதிப்புனல்

10) வல்லின உயிர்மெய்க்குறில் எழுத்துக்களின் மொத்த எண்ணிக்கை

1) 126 2) 30 4) 5

11) A,E,I,O,U என்பன ஆங்கிலத்தில் உயிர் எழுத்துக்களாகக் காணப்படுகின்றன. அரை உயிர் எனக் குறிப்பிடப்படும் எழுத்துக்கள் எவை ?

1) B,C 2) M,R 3) W,Y

12) அரசின் நிர்வாக ரீதியான செய்திகளைத் தாங்கி வெளிவரும் அதிகார பூர்வ எடு

1) வர்த்தமானி 2) மத்தியவங்கி அறிக்கை 3) தினகரன்

13) எவரெஸ்ட் சிகரத்தினை எட்டிய முதல் மனிதர்

1) வாஸ்கொடகாமா 2) டென்சிங் 3) யூரிககாரின்

14) உலகில் மிகப்பெரிய செல்வந்தர்

1) கோபி அனான் 2) சதாம்உசேன் 3) பில்கேட்ஸ்

15) ஓசோனுக்குரிய குறியீடு 1) $O_3$ 2) $H_3O$ 3) $O_2y$

16) a-$\alpha$xb-$\alpha$xc-$\alpha$xd-$\alpha$xe-$\alpha$x...எனச் சென்று z-$\alpha$ இல் முடியுமாயின் இதற்குரிய விடை

1) $x^2$ 2) O 3) a+b+c+d+e....zx$\alpha$

17) செருப்புக்கு விலையிடும்போது 79:90 சதம் என்ற வகையில் விலையிடுவது

1) உளரீதியாக குறைவான விலை என்று காட்ட
2) 10சதம் இலாபம் ஈட்ட
3) இராமனின் பாதணி அரசாட்சி புரிந்ததை நினைவூட்ட

18) "கிராண்மாஸ்ரர்" பட்டம் பெற்ற இந்திய வீரரான விஸ்வநாதன் ஆனந்தின் விளையாட்டுத்துறை

1) சதுரங்கம் 2) டென்னிஸ் 3) கிட்டிப்புள்

19) தைப்பொங்கலுக்கு முதன்நாளில் பழைய பொருட்களைத் தீயிட்டுக் கொழுத்துவார்கள். இப்பண்டிகையின் பெயர்
1) ஓணம் 2) போகி 3) ஹோலி

20) "ரோம்" நகரம் தீப்பற்றி எரிகையிலே 'பிடில்' எனும் இசைக்கருவியை வாசித்தவனாக பழித்துரைக்கப்படும் மன்னன்
1) இடியமீன் 2) புருட்டஸ் 3) நீரோ

**போட்டி நிபந்தனை**
விடைகளுடன் அனுமதி அட்டை இணைக்கப்படவேண்டும்
**முடிவுத் திகதி : 22-09-2003**

## *தேடல் போட்டி இல - 04 க்கு சரியான விடையை எழுதிப் பரிசு பெறுவோர்*

| | | |
|---|---|---|
| 1ம் பரிசு | – | சுபாஜினி செல்லத்துரை<br>12 கலை யா.வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி |
| 2ம் பரிசு | – | ஆஷா சிவராஜா<br>2005 கலை யா.தேவரையாளி இந்துக்கல்லூரி |
| 3ம் பரிசு | – | ம.காயத்திரி 6C யா.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி |

### ஆறுதல் பரிசாக தலா 50/= பெறுவோர்

துவாரகா தர்மரத்தினம் 2005 கலை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
விஸ்வலிங்கம் கார்த்திக் 8A யா.நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
நாகேஸ்வரன் ஜீவிதா 2005 கலை யா.தேவரையாளி இந்துக் கல்லூரி
அஜிதா பாலசுப்பிரமணியம் தரம் 12 யா.வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

### சரியான விடைகளை எழுதிப் பாராட்டுப் பெறுவோர்

| | |
|---|---|
| பாலசுபேந்திரன் நந்தகோபன் | 8A யா.நெல்லியடி ம.ம.வித்தியாலயம் |
| செல்லையா விஜயகாந்தன் | 10B யா.விக்னேஸ்வராக் கல்லூரி |
| ரங்கநாதன் மோகனப்பிரியன் | 9A ஹாட்லிக் கல்லூரி |
| மோகனா சந்திர சேகரம் | 10A யா.கொற்றாவத்தை அ.மி.த.க |

| | |
|---|---|
| சற்குணராசா அருண்ஜா | 8 யா.கம்பர்மலை அ.த.க.பா |
| ஜெகதாஸ் யசோ | 8 யா.கம்பர்மலை அ.த.க.பா |
| அகஸ்ரீன் துரைராஜா - மேரி கலிஸ்ரா | 2004 கலை யா.ஞானசாரியார் கல்லூரி |
| அமுதா தங்கவேல் | 2005 கலை யா.ஞானசாரியார் கல்லூரி |
| கனகசூரியர் விஜிதா | 2004 வர்த்தகம் யா.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி |
| சிவநாதன் றஜீவனா | 9A யா.தேவரையாளி இந்துக்கல்லூரி |
| சுஜாதா இராஜகோபால் | யா.வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி |
| குணசேகரம் யுகந்தன் | 6A யா.உடுப்பிட்டி அ.மி.க. |
| விஜியராசா ஜெயகீதன் | 9A யா.உடுப்பிட்டி அ.மி.க. |
| சிவகுமாரன் பிரசாத் | 9A யா.உடுப்பிட்டி அ.மி.க. |
| ஸ்ரீபத்மநாதன் உமாதரன் | 12 கலை யா.உடுப்பிட்டி அ.மி.க. |
| நிரோஜினி சிவஞானசுந்தரம் | 11 யா.வல்வெட்டி இ.த.க.பாடசாலை |
| ஐயாத்துரை நிஷாந்தினி | 11 யா.கொற்றாவத்தை அ.மி.த.க.பா |

**போட்டியில் பங்குபற்றிய நூற்றுக் கணக்கான மாணவர்களுக்கும் சரியான விடை எழுதியோருக்கும் பரிசு பெற்றோருக்கும் "ஏகலைவன்" சார்பில் நல்வாழ்த்துக்கள்**

- பிரதம ஆசிரியர் -

## தேடல் போட்டி இல -04 விடைகள்

1) பாதுகாப்பு
2) ஷாஜகான்
3) 600 கோடி
4) ஜேம்ஸ் கமரூன்
5) பபிலோ பிக்காஸோ
6) 13
7) திருமாவளவன்
8) எம்.எஸ். சுப்புலட்சுமி
9) மேற்கிந்தியத் தீவுகள்
10) அக்பேனி டேர்கோ
11) சுனிதாராணி
12) கால்மாக்ஸ்
13) 1815
14) கல்பனா
15) மீன்
16) ரவிந்திரநாத்தாகூர்
17) 1983
18) மேற்கிந்தியத் தீவுகள்
19) சீனா
20) சிவசம்பு

# உங்கள் இதயத்திலிருந்து.......

தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்
25.06.2003.

*அன்புள்ள ஏகலைவன் ஆசிரியருக்கு,*



ஏகலைவன் இறுதி இதழ் பார்த்தேன். உங்கள் முயற்சி பாராட்டுக்குரியது.

இதழில் இடம்பெற்ற ஆக்கங்கள் அனைத்தும் குறிப்பிடத் தக்கவையாக உள்ளன. செல்.சுதர்சனின் பாரதியின் அக்கினிக் குஞ்சு பற்றிய விமர்சனம் சிறப்பாக அமைந்திருக்கிறது. எதிர்காலத்தில் இலங்கையின் சிறந்த விமர்சகர்களுள் ஒருவராக அவர் இடம்பெறுவார் என்பதை அவரது விமர்சனம் புலப்படுத்துகிறது. இது போன்றே நுதல்விழி இமையவனின் ரமணிச்சந்திரன் பற்றிய விமர்சனமும் சிறப்பாக அமைந்துள்ளது. இத்தகைய விமர்சனங்கள் தொடர வேண்டும்.

கலாநிதி செ. யோகராசாவின் ஈழத்துத் திறனாய்வின் வளர்ச்சி பற்றிய கட்டுரை , ஜெயசீலனின் கவிதை ஆகியவையும் சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டியவை. பிற அம்சங்களும் இதழைப் பொலிவுறச் செய்கின்றன.

*ஏகலைவனுக்கு எனது வாழ்த்துக்கள் !*

அன்புடன்
**கலாநிதி துரை மனோகரன்**

சமூக கலை இலக்கிய, கல்வி அறிவியல்ஏடான சித்திரை வைகாசி -2003 இருதிங்கள் தாங்கிய நான்காவது இதழாகிய "ஏகலைவன்" சஞ்சிகை வெளிவந்துள்ளது.

உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியினால் பாடசாலை மட்டத்திலிருந்து வெளிக்கொண்டு வரும் இச்சிறு சஞ்சிகை மாணவர்

களின் கலை இலக்கிய, அறிவியில் சார்ந்த விடயங்களை வெளிக் கொண்டு வந்து அவர்களின் வளர்ச்சிப் பணிக்கு உந்து சக்தியாக வெளிவந்துள்ளது பாராட்டத்தக்கது. "ஏகலைவன்" பல பாடசாலைக ளுக்கும் பரந்து விரிந்து மாணவர்களின் வாசிப்புத்திறனை வளர்ப்ப தோடு, எழுத்துத்துறைக்கும் புதிய களமமைத்துக் கொடுத்து ஊக்கப் படுத்தப்படவேண்டும். சஞ்சிகையின் வடிவமைப்பு நல்லதாக இருப் பினும் கொஞ்சம் கவனமெடுப்பது நல்லது. ஏகலைவனின் ஊக்கு விப்புக்கு மாணவர்கள் மட்டுமல்ல அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய தாகும்.

ஈழநாதம் 11-17 ஜூலை 2003.

" ஒரு பாடசாலை இன்றைய சூழலில் இவ்வாறு ஆக்க பூர்வ மான செயற்பாட்டில் ஈடுபட்டிருப்பது பெருமைக்குரியது. இந்த நல்ல சிந்தனைக்கு எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும். பிம்பங்களின் மத்தியில் எழுத்தை முன்வைப்பது இன்று பெரும் சவாலாகியுள்ளது. இந்தச் சவாலை நீங்களும் ஏகலைவனும் ஏற்றிருக்கிறீர்கள். பாரா ட்டுதல்கள்

அதேவேளையில்-

ஏகலைவனில் இன்னும் கொஞ்சம் சீரியஸான விடயங்கள் சேர்த்துக் கொள்ளப்படுவது அவசியம் என்று படுகிறது. பெறுமதியான விடயங்களைத் தருவதன்மூலம் தான் இந்தச் செயற்பாட்டையும் ஏக லைவனையும் மற்றவரிடத்தில் மதிப்புடன் பதிய வைக்க முடியும். ஏனைய விழல்குணங்களிலிருந்து இவ்வாறான செயல்களும் வெளிப் பாடுகளும் வேறுபட்டவைஃ பெறுமதியானவை என்பதை நிருபிக்க வேணும்.

ஏகலைவன் நெகிழ்ச்சியுடன் நல்லவற்றுக்காகவும் சீரியஸான வற்றுக்காகவும் விரிந்து கொடுக்கும் எனநம்புகின்றேன்.

வாழ்த்துக்களுடன்
**சி.கருணாகரன்**

'மகிழ்'
புதுக்குடியிருப்பு 04
முல்லைத்தீவு

சுவர்ணக் கனவுகளை செதுக்கும் கலைக்கூடம்

ஆபரண வகைகளுக்காய் அவதரித்த மணிமாடம்



# நிரஞ்சன் நகைமாடம்

சந்தை வீதி, உடுப்பிட்டி.



- தூய 22 கரட் தங்கத்தில்
  நாளைய நாகரிகத்தை இன்றே
  அறிமுகப்படுத்துவோர்

- குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன்
  உங்கள் நகைகளை செய்து கொடுப்போர்

- அழகிய கலை நயம் – எழிலுரு தொழில்வளம்
  உயர்தர நகையினம் – அதிசய விலைநயம்
  என்று ஆச்சரியப்படுத்துவோர்

**“ புன்னகை கொண்டு வாருங்கள்**
**பொன்னகை கொண்டு**
**போவீர்கள் ”**

வானவில் சங்கமிக்கும் வர்ண தாஜ்மஹால்

# விசாகா ஸ்ருடியோ
## வீடியோ அன் போட்டோ





நிகழ்வுகளை வரையும் தூரிகையான
வீடியோ படப்பிடிப்பு
வாழ்வியலின் சாசனமாய் மிளிரும்
வர்ணப் புகைப்படப் பிடிப்பு
காலத்தின் கல்வெட்டாய்த் திகழும்
கறுப்பு - வெள்ளைப்படப்பிடிப்பு


**அனைத்தையும் அள்ளி வழங்கும்**
**தன்னிகரில்லாத் தலைமையகம்**

# VISAKA STUDEO
## VIDEO & PHOTO

Mill Lane Uduppiddy



உரிமையாளர்
எஸ் ரமேஸ்
T.P: 0777 078566





இச் சஞ்சிகை இ.க. முரளீதரன் அவர்களால் பருத்தித்துறை
V.M. வீதியிலுள்ள S.P.M. பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது